உ

# அருள் ஒளி



100

**சிவத்தமிழ்ச்செல்வியின் அகவை 90 சிறப்பு மலர்**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**


**தெல்லிப்பழை, இலங்கை**

**2015**

## காரைநகர் மணிவாசகர் சபை
## பவளவிழாக் குறித்து வாழ்த்துகிறோம்

மணிவாசகர் சபையை உருவாக்கிய மனிதருள் மாணிக்கம்
பண்டிதர், கலாநிதி, மூதறிஞர்

# சிவஸ்ரீ. கா. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள்
# பணியினைப் போற்றுகிறோம்



## அகவை 99ஐச் சந்தித்து வாழும் பெருந்தகை

**நிர்வாக சபை**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



உ

# அருள் ஒளி

## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

உதவி ஆசிரியர்

**சைவத்திரு. கா. சிவபாலன் அவர்கள்**

**ஐப்பசி - கார்த்திகை - மார்கழி மாத மலர்**

**2014**

**வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை, இலங்கை.**

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

**பதிவு இல. : QD / 74 / NEWS / 2006Y**


# அன்னை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களின் அகவை தொண்ணூறு பூர்த்தி நாள்

ஈழத்திருநாட்டில் நாவலர்பெருமான் வழியில் சைவசமயத்துக்கும், தமிழ்மொழிக்கும், சமூகத்துக்கும் உழைத்த பெருந்தகை பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் என்றால் மிகையாகாது. 1925ஆம் ஆண்டு ஜனவரி 07ம் நாள் மிருகசீரிட நட்சத்திரத்தில் பிறந்த அம்மையார் தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்போடு பணியாற்றி 2008 யூன் மாதம் விசாக நட்சத்திரத்தில் இறையடிக்குச் சென்றார். சொல்லாலும், செயலாலும் ஒன்றாய் வாழ்ந்த அம்மையாரின் வாழ்க்கை சைவ உலகம் உள்ளவரை நீள நினைந்து போற்ற வேண்டிய கடப்பாடு அனைவர்க்குமுண்டு.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இன்றைய வளர்ச்சிக்கு அவரது பங்களிப்பு என்பது எல்லையற்றது. நிறைந்த ஆன்மீக இலக்கியப்புலமை மிக்க அம்மையாரின் பேச்சுவன்மை ஆயிரம் ஆயிரம் மக்களைக் கவர்ந்தது. கணீரென்ற குரலில் திருமுறைகளைப் பாடி உரையாற்றும் ஆற்றல் அவரின் தனித்துவம் எனலாம். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இலண்டன் போன்ற நாடுகளுக்குச் சென்று தன் சொல் வன்மையால் எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்தவர் இவர். மலேசியா நாட்டில் ஒரு திருக்கோவில்

தலைவிரி கோலமாக பெண்கள் வழிபாடு செய்ய வந்தமை கண்டு தனதுரை மூலம் அவர்களை நிதானப்படுத்தியதாக இன்றும் அங்குள்ள மூத்தோர் சொல்லிப் பெருமைப்படுவார்கள். கண்ணகி கோவலனை இழந்து பாண்டியனிடம் நீதி கேட்கச் சென்றபோது தலைவிரி கோலத்தோடும், அழுத கண்ணோடும் சென்றாள். பாஞ்சாலி கௌரவர் சபையில் அவமானப்பட்டபோது தலைவிரி கோலத்தோடு வந்தாள். பெண்கள் அவலங்களைச் சந்தித்த போதே தலைவிரித்தனர். ஆண்டவனை வழிபாடு செய்யவரும் பெண்களே! உங்கள் கோலத்தைச் சிந்தித்து ஒழுங்குபடுத்தி வாருங்கள் என ஆற்றிய உரை இன்றும் மலேசியாவில் சைவ மக்களிடையே உணர்வுபூர்வமாகப் பேசப்படுகிறது. அவரது சொற்பொழிவால் பல ஆலயங்களின் கட்டமைப்பு ஒழுங்குநிலை ஏற்பட்டது. சமூக உறுப்பினர்களிடையே தொண்டு மனப்பான்மையை வளர்க்க உதவினார். ஆதரவற்ற மழலைகளைக் காப்பது உயர்ந்த ஜீவ சேவை எனப் பலருக்கு எடுத்துரைத்தார். அம்மையாரது சிந்தனையை உள்வாங்கியே பல சிறுவர் இல்லங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தோற்றம்பெற்றன எனலாம்.

அம்மையாரின் புலமையைக் கண்டு காரைநகர் மணிவாசகர் சபையின் காவலர், கலாநிதி பண்டிதர் சிவஸ்ரீ. கா. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் 'சிவத்தமிழ்ச்செல்வி' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கினார்கள். பல விருதுகளை அம்மையார் பெற்றாலும் இந்நாமமே அவருடன் நிலைபெற்றது. அமெரிக்காவிலுள்ள உலகப் பிரசித்திபெற்ற ஹவாய் சைவ ஆதீனம் "HINDU RENAISSANCE AWARD" என்ற உலக விருதை 2006ல் வழங்கிக் கௌரவித்தது. யாழ். பல்கலைக்கழகம் அம்மையார் வாழும் போதே கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி தன் கடமையை நிறைவேற்றிப் பெருமை பெற்றது. அமைதியாக பற்று நீங்கி வாழ்ந்த அம்மையார் சாதித்த சாதனைகள் என்றும் மறக்கமுடியாதவை. அன்னார் வாழும் போதே அவரது பிறந்தநாளை அறக்கொடை விழாவாக சமூகம் கொண்டாடியது. அவரது பூதவுடல் நீங்கிய பின்பும் அவர் மண்ணில் உதித்தநாள் மகிமையாகக் கொண்டாடப்படுவது பெருமைக்குரியது.

**ஆசிரியர்**

# பெரியபுராணமும் சைவசித்தாந்தமும்

சிவத்தமிழ்ச்செல்வி. கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

**"இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்**
**தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"**

என்பது ஔவையாரின் வாக்கு. நினைப்பவர் மனம் கோவிலாய்க் கொண்டவன் பெருமான். இதனாலேயே அடியவர்களின் பெருமை ஆண்டவனின் பெருமையிலும் பார்க்க விஞ்சி நிற்கிறது. இத்தகைய பெருமையுடையவர்களைப் பற்றிப் பேசிய புராணம் பெரியபுராணம் என்று போற்றப்படுகிறது. முதற் பதினொரு திருமுறைகளும் இறையின்பத்தின் நிலைமையை எடுத்தோதுவன. ஈற்றிலுள்ள பன்னிரண்டாந் திருமுறை மாத்திரந்தான் இறையின்பத்திற் திளைத்த அடியார்களைப் பற்றிக் கூறுவது அவர்கள் இறையின்பத்தில் திளைத்தவர்கள்.

**"காலையும் மாலையும் கைதொழு வார்மனம்**
**ஆலய மாமே அரனெறி யார்க்கே".**

என்னும் திருமுறைக்கேற்ப அடியவர்களின் உள்ளமே ஆண்டவனுக்குரிய இடமாகும். இறைவன் திருவருள் எங்கும் நிறைந்திருந்தாலும் சிறப்பாக வெளிப்பட்டு விளங்குவது சிவனடியார்களிடத்திலே தான் என்று அறிகிறோம். இதனை நீதி வெண்பா என்ற நூல் அழகான முறையில் விளக்குகிறது. வெப்பமானதாகிய சூரியனது கிரணத்தில் நின்றாலும் நிற்கலாம். அக்கிரணத்தைப் பெற்று வெப்பமாக விளங்கும் மணலின்மேல் நிற்றல் முடியாது. அதே போன்று இறைவனுடைய அருளாற்றலிலும் பார்க்க அவ்வருளைப் பெற்று நிற்கும் அடியவர்களின் அருளாற்றல் வியத்தற்குரியதாகும்.

**"ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த**
**நேசரெதிர் நிற்ப தரிதாமே - தேசுவளர்**
**செங்கதிர்முன் நின்றாலும் செங்கதிர வன்கிரணம்**
**தங்குமணல் நிற்பதரிதே தான்".**

இவ்வாறு நீதிவெண்பா என்ற நூல் அழகாக விளக்குகிறது.

## சேக்கிழார் நற்பணி

தோத்திரங்களுக்கும் சாத்திரங்களுக்கும் இடைப்பட்ட ஒரு காலத்திலேயே சேக்கிழார் சுவாமிகள் வாழ்ந்தார். மெய்கண்ட சாத்திரங்களுள் முடிமணி போன்று விளங்கும் சிவஞானபோதத்தையருளிய மெய்கண்ட தேவநாயனாருக்கு எழுபது வருடம் முந்தி வாழ்ந்தவர் இவர். காலத்தை நோக்கி இவர் ஆற்றிய இந்தச் சேவையினால் சைவத் தமிழுலகம் மூன்று பெரும் பயன்களை அடைந்ததெனலாம். முதலாவது, ஆட்சிப் பீடத்திலே சைவத்தை ஏற்றிவைத்த பெருமையாகும். இரண்டாவது நாயன்மார்கள் வரலாற்றை உலகுக்குக் காட்டிய சிறப்பாகும். மூன்றாவது, சைவசித்தாந்தத்துக்கு விளக்கங்கொடுத்த பெருமையாகும். இதனாலேயே சைவசித்தாந்த சாத்திரங்களில் எட்டு நூல்களை ஆக்கிய உமாபதி சிவாச்சாரியார் அவர்கள் சேக்கிழாருக்கு ஒரு தனிப்புராணம் இயற்றினார். மாதவச் சிவஞான சுவாமிகளும் "எங்கள் பாக்கியப் பயன் சேக்கிழார்" என்று போற்றினார். இன்னும்,

**"தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி**
**வாக்கினாற் சொல்லவல்ல பிரான்".**

என்று குறித்தருளினார்.

## நூலின் தோற்றம்

அரசன் அநபாயசோழன் திருமுறை முதலிய நூல்களில் ஈடுபட்டுத் திருவருளைப் பெற்று உய்யாமற் சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்களிலே ஈடுபாடு கொண்டு சுவைப்பதைச் சேக்கிழார் உணர்ந்தார். இந்த ஈடுபாட்டை மாற்ற வேண்டுமென்று கருதி அரசனுக்குச் சிவகதைகள் பற்றிச் சுருக்கமாக விளக்கினார். இதனால் திருத்தொண்டர்களது வரலாற்றை விரிவாகப் பாடித்தரும்படி அமைச்சராகிய இவரை அரசனே வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு திருத்தொண்டர்களது வரலாற்றை எடுத்துப் பாடுவதில் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆனால் பாடுவதற்குத் தனக்குத் தகுதியுண்டா என்று எண்ணி, ஏங்கி இறைவனை நினைந்தார்.

**"ஊனக்கண் பாசம் உணராப் பதியை**
**ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"**

என்னும் சைவசித்தாந்த விளக்கப்படி இறைவனே தனக்கு உள்நின்று உணர்த்த வேண்டுமென்று நினைத்தார். தில்லையை நோக்கிச் சென்றார். அதன் எல்லையிலே வீழ்ந்து வணங்கினார். திருக்கோயிலில் புகுந்து வலம்வந்து கனகசபையிலே கூத்தப் பெருமானைக் கண்டு வணங்கி "எம்பெருமானே! உன்னடியார்களது பெரும்புகழைப் பாட அடியேனுக்கு அடியெடுத்துக் கொடுத்தருளல் வேண்டும்" என்று வணங்கினார்.

## உலகெலாம்

தில்லையம்பலவன் திருவருளால் அப்பொழுது "உலகெலாம்" என்ற பேரொலி அசரீரியாக எழுந்தது. இதனை அறிந்து கொண்ட தில்லைவாழந்தணர்கள். சேக்கிழாரது திருவருட் பெருமையை வியந்து கூத்தப் பெருமானது திருமாலையைத் திருநீற்றுடன் அவருக்கு அளித்துப் பரிவட்டங்கட்டி வாழ்த்துக்கூறி நின்றார்கள். அவையனைத்தையும் ஏற்றுக்கொண்டு ஆயிரங்கால் பண்டபத்தையடைந்து "உலகலொம்" என்ற அச்சொல்லையே முதலாகக் கொண்டு புராணத்தைப் பாடத் தொடங்கினார்.

**"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்".**

கூத்தப் பெருமான் எடுத்துக் கொடுத்த இந்த உலகெலாம் என்ற தொடரை முதலாகக் கொண்டு பாடிய சேக்கிழார் இறைவனது திருவடியையே அதன் பொருளாகக் கொண்டு முதற் பாடலை பாடிமுடித்தார்.

## முதற்பாடல் தரும் சித்தாந்த விளக்கம்

உலகு என்பது உயிர்களைக் குறித்து நிற்கிறது. இறைவன் உயிர்களின் சொல்லையும் நினைவையும் கடந்தவன். அதனாலேயே கடவுள் எனப்படுகிறான். பாச ஞானங்களுக்கும் பசு ஞானங்களுக்கும் அப்பாற்பட்டவனாகிய இறைவனை அரியவனாகக் காட்டி, அடிகள் உணர்த்தல் என்பதால் மனத்தையும் ஓதுதல் என்பதால் வாக்கையும் காட்டி வாக்குமனாதீதன் என்பதை விளக்குகிறார். இது இறைவனுடைய சொரூப நிலையாகும் ஆனால் உணர்வதற்கு அரியவனாயினும் எளியவனாக உருவந்தாங்கி நிற்றலால் இரண்டாவதடியில் "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" என்கிறார். எனவே இது இறைவனது தடத்த நிலையைக் கூறுகிறது. அத்தடத்த நிலையில் அனந்தசக்தி எனப்படும் அளவில்லாத ஆற்றல்களை உடையவனாகப்

உயிர்களைப் பஞ்ச கிருத்தியம் செய்து உய்விப்பதை விளக்கி, "அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்" என மூன்றாமடியில் அருளுகிறார்'. 'மலர் சிலம்படி' என்பதால் எல்லாப் பொருள்களும் அவனது திரு வடியிற் தோன்றுவது உணர்த்தப்படுகிறது. பக்குவமுள்ள அன்பர்களின் உள்ளத்திலே மலர்கின்ற சிலம்படி இதுவாகும். நினைத்தல், வாழ்த்தல், வணங்கல் ஆகிய முக்கரண வழிபாட்டையும் சிலம்படிக்குக் கூறி தொடங்குகிறார். கூத்தப்பெருமான் எடுத்துக் கொடுத்த 'உலகெலாம்' என்பதை முத லாகக் கொண்டு தம் வியாபாரத்தை நன்கு செய்தார் என்று மீனாட்சி சுந்தரம்பிள்ளை பாடிச் சேக்கிழாரைச் சிறப்பிக்கின்றார். இவ்வாக்கினை முதல், நடு, முடிவு என்னும் மூன்றிடத்திலுஞ் சிறப்பாக அமைத்து முடித்திருக்கிறார். திருஞானசம்பந்தர் இறைவன் அளித்த முத்துச் சிவிகையை ஏற்று அதனை வலம் வந்து வணங்கி அஞ்செழுத்து ஓதி அதன் மீது அமர்ந்தவன் என்பதை எடுத்துக் காட்டிய இடத்தில்,

**"சோதி முகத்தின் சிவிகை சூழ் வந்துபார்**
**மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றி நின் (று)**
**ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்(து)**
**ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்".**

எனப் பாடியுள்ளார். நாலாயிரத்து இரு நூற்று எண்பத்தொரு பாடல்களில் ஏறக் குறையப் பாதி அளவில் மேற்காட்டிய பாடல் அமைந்து நடுவில் 'உலகெலாம் என்பது விளங்குறிது. திருத்தொண்டத் தொகையை அருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் திருவாரூர் பெருமானே அடியெடுத்துக் கொடுத்த வகை நூலாகிய திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் திருநாரையூர்ப் பிள்ளையார் அருள் அளித்து விரி பாடிய சேக்கிழாருக்கும் அம்பலவாணர் அடி யெடுத்துக் கொடுத்தார்.

## சுத்தாத்துவித சைவசித்தாந்தப் புதையல்

சைவத்தின் குலக்கவிஞராகிய சேக் கிழார் சித்தாந்த உண்மைகளைத் தெளிவு பட இந்நூலில் விளக்கியுள்ளார். இவர் காலத்துக்கு முன் சமயாசாரியார்களின் பாடல்களும் திருமந்திரமும் ஞானா மிர்தம் போன்ற சித்தாந்த சாத்திரங்களும் தோன்றியிருந்த போதிலும் சித்தாந் தத்தின் முப்பொருள் உண்மைகளையும், சாதனம், பயன் முதலிய இயல்புகளையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாத விளக்கங்களையும் குரு, லிங்க, சங்கம வழிபாட்டு விளக்கங்களையும் மிகச் சிறப்பாக விளக்கிய பெருமை சேக்கிழார் சுவாமிகளுக்கே உண்டு. உயிரின் இயல்புகளையும் பசு, பாச, ஞானங் களின் இயல்புகளையும், பதி ஞானத்தின் உயர்வையும், அணைந்தோர் தன்மையை யும், அடியார்களின் பெருமையையும், அவர்கள் இறைவனுடன் இரண்டறக் கலந்த தன்மையையுந் தெளிவுற விளக்கியுள்ளார்.

## இருவகை ஞானம்

திருத்தோணிபுரத்தில் ஞானப்பாலூட் டப்பட்ட சந்தர்ப்பத்தில் தவமுதல்வர் சம்பந்தர் ஞானம் பெற்ற தன்மையை விளக்குமிடத்தில் பாடிய,

**"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்**
**பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கிய ஞானம்**
**உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்**
**தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்"**

என்ற பாட்டில் விளக்கிய ஞான வாய்மையே சிவஞானசித்தியாரில் அப்படியே அடி யொற்றிக் கூறப்படுகிறது.

**"கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை**
**கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்"**

என்கிறார் அருணந்திசிவம். கேட்டல், சிந்தித்தல், இரண்டும் நூல் பற்றியதா கையால் அபரஞானம் என்றும், தெளிதல், நிற்றல் இரண்டும் நூல் பற்றாததாகை யால் பரஞானம் என்றுங் கூறப்படும். உவமையில்லாக் கலைஞானம், உணர் வரிய மெய்ஞ்ஞானம் என்றும் பிரித்துச் சேக்கிழார் காட்டியபடியே அருணந்தி சிவமும் பிரித்து விளக்கியுள்ளார்.

## திருப்பாசுர விளக்கம்

திருஞானசம்பந்தர் சமணருடன் புனல் வாதஞ் செய்யச் சித்தங்கொண்டு சைவத்தின் பெருமையை உலகிற்குக் காட்டி அருளிய பதிகம் திருப்பாசுர மாகும். இது ஞானபாத முடிவாய்ச் சிவஞானபோதத்தின் விளக்க மாய் அமைந்துள்ளது. முதல் மூன்று பாட் டுக்களும் பொதுவகையிலும், பின்பாட் டுக்கள் சிறப்பு வகையிலும் அமைந்துள்ளன. 'வாழ்க அந்தணர்' என்ற பாட்டின் விளக் கத்தில் சங்காரக் கடவுளாகிய சங்கரனே முதல்வன் என விளக்கி வேள்விகள், அர்ச்சனைகள், வழிபாடுகள் யாவும் அவனுக்கே உரியதெனக் காட்டுகிறார்.

**"அந்தணர் தேவர் ஆனினங்கள் வாழ்கவென்று
இந்தமெய்ம் மொழிப்பயன் உலக மின்புறச்
சந்தவேள் விகள்முதற் சங்க ரர்க்குமுன்
வந்த வர்ச்சனை வழிபாடு மென்னுவாம்"**

எனக்கூறி அடுத்தபாட்டில் உரிய அன்பினிற் காண்பவர்க் குண்மையாம், பெரிய நல்லடையாளங்கள் பேசினர்' என விளக்கி இறைவன் உண்மையன்பர்க்கே காட்சி கொடுப்பான் என்பதையுங் கூறி, பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்த பெருமையையும் விளக்கியுள்ளார். சிவஞானபோதம் 8ம் சூத்திரப் பொருளைச் சேக்கிழார் மெய் கண்டாருக்கு முன்னமே கூறிப்போந்தார்.

**"தம்மையே சிந்தியா வெனுந் தன்மைதான்
மெய்ம்மை யாகி விளங்கொளி தாமென
இம்மையே நினை வார்தம் இருவினைப்
பொய்ம்மை வல்லிருள் போக்குவா ரென்றதாம்"**

இவ்வாறு பல சைவசித்தாந்தக் கருத் துக்களை எடுத்து விளக்கும் திட்பத்தைத் திருப்பாசுர விளக்கத்திற் காட்டியுள்ளார்.

## மும்மலங்கள் பற்றிய விளக்கம்

சைவசித்தாந்த சாத்திரங்கள் மும் மலங்கள் பற்றி விளக்கி நிற்கின்றவெனினும் அவற்றுக்கெல்லாம் முன்னோடியாக நின்று விளக்கந் தந்தவர் சேக்கிழார். நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலே போடுகிறார்கள். "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று பதிகம் பாடுகிறார். கல் மிதக்கிறது. தெப்பம் போல் அதன் மேல் உட்கார்ந்து வருகிறார் நாவரசர். இந்த இடத்திற் சேக்கிழார் அதிசயத்தோடு உணர்ந்த ஒரு உணர்வைத் தருகிறார். 'இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின், வருபவக் கடலில் வீழ் மாக்கள் ஏறிட, அருளும் மெய்யஞ்செழுத்து' என்று கூறி வினையாகிய கர்மம், பாசமாகிய மாயை, மலம் எனப்பட்ட ஆணவம் மூன்றையும் இணைத்து பிறவியென்னும் கடலில் தடுமாறும் மக்களைக் கரையேற்றும் சக்தி திருவைந்தெழுத்துக்கு உண்டு என்பதை விளக்கி அத்தகைய ஐந்தெழுத்து திரு நாவுக்கரசரை ஒரு கல்லோடு பிணிக்கப் பட்டபோது கரையேற்றாமல் இருக்க முடியுமா என்கிறார். கண்ணப்பநாயனார் புராணத்தில் இன்னும் சிறப்பாக மும்மல விளக்கத்தைக் காண்கிறோம்.

**"முன்புதிருக் காளத்தி முதல்வனார் அருள்நோக்கால்
இன்புறுவே தத்திரும்பு பொன்னானாற் போல் யாக்கை**

"தன்பரிசும் வினையிரண்டும் சாருமல மூன்றுமற
அன்புபிழும் பாய்த்திரிவர் அவர்கருத்தின் இளவினரோ"

திருக்காளத்தி அப்பரைத் தரிசித்த மாத்திரத்திலே திண்ணனாரிடத்திற் காணப்பட்ட மாற்றங்களைக் கூறுகிறார். யாக்கை தன்பரிசு என்பது மாயையாகும். மும்மலக்கழிவு குறித்துச் சிவச்சார்பு பற்றி நின்றதைக் காட்டுகிறார். அன்புப் பிழம்பாகிய அடியவரின் மலநாசத்தினால் ஏற்பட்ட மாற்றம் இரசவாதத்தால் இரும்பு பொன்னானாற் போன்ற பெரு மாற்றமாகும். பேணுதத்துவங்களென்னும் பெருகுசோ பனமேறி, ஆணையாம் சிவத்தைச் சாரச் சென்றவர் அவர். இங்கே தத்துவங்களின் படிமுறையினையும் தசகாரியம் எனப்படும் சோபன முறையையுஞ் சுருங்கச்சொல்லி விளங்க வைக்கின்றார்.

கூன்பாண்டியன் வெப்புநோய் காரணமாக அல்லலுற்ற நேரத்தில் ஞானசம்பந்தர் பாண்டியனுக்குத் திருநீற்றினைப் பூசிப் பதிகம் பாடி வெப்பை நீக்கிய இடத்திலும் இக்குறிப்பு வருகிறது.

"தென்னவன் மாறன் தானும் சிவபுரத் தலைவர் தீண்டிப்
பொன்னவில் கொன்றை யார்தம் திருநீறு பூசப்பெற்று
முன்னைவல் வினையும் நீங்கி முதல்வனை யறியுந்தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத் துலையென நிற்ற லாலே".

ஞானசம்பந்தரால் நோக்கம் பெற்றவுடனேயும் அவர் நாமம் கேட்டவுடனேயும் திருநீறு பூசப்பட்டுப் பரிசதீட்சை பெற்றவுடனேயும் முன்வினை நீங்கி இறைவனை அறியுந் தன்மையை அடைந்தான் பாண்டியன் எனக் காட்டுகிறார். இளையான் குடி மாறநாயனார் தமது விட்டுக் கொல்லையில் உள்ள கீரைவகைகளைப் பிடுங்கிச் சிவனடியாருக்குத் திருவமுதூட்ட நின்ற சமயத்தில்,

"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்கு நல்க"

என்பதால் நாயனாருடைய பாசம், பழி பாவங்கள் அனைத்தையும் வேரோடு களைவது போல அங்கிருந்த குறும்பயிரைக் களைந்தாரெனக் கூறப்பட்டுள்ளது.

## உய்வானுளன்

சாக்கியநாயனர் புராணத்தில் மற்றொரு சைவசித்தாந்தக் கருத்தைக் காண்கிறோம். சாக்கியநாயனர் புத்தர்களது அறத்தின் வழியைச் சார்ந்து நல்ல ஞானமடைவதற்குப் பலவழிகளையும் ஆராய்ந்து அச்சமய முடிவுகளெல்லாம் உண்மைப் பொருளை உணர்ந்தாவென்றும் ஈற்றில் சிவ நன்னெறியே மெய்ப்பொருளாவதென்றும் உணர்ந்தார். சிவனை அடைவதே உய்யும்வகை என்றும் உணர்ந்து கொண்டார்.

"செய்வினையும் செய்வானும் அதன் பயனும்
– சேர்ப்பானும்
மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்
– கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே
உணர்ந்தறிந்தார்".

அதாவது செய்யும் வினை ஒன்று; செய்பவனாகிய கருத்தா ஒன்று; அதன் பயன் ஒன்று, அதனைக் கொடுத்து ஊட்டுபவனாகிய முதல்வன் ஒன்று என எண்ணப்படும் நான்குமே உண்மைக் கூறுபாட்டால் துணியப்பட்ட பொருள் எனக் கொண்டு இந்தச் சிறப்பு சைவநெறிக்கே உண்டென்றும் ஏனையவற்றுக்கு இல்லை யென்றும் துணிந்து திருவருளால் உண்மைப்

பொருள் சிவனெனத் தெளிந்தார் என்ப தாம். உமாபதிசிவம், திருவருட் பயனில் இக்கருத்தின் விளக்கமாகவே,

**"செய்வானும் செய்வினையும் சேர்பயனும்**
**சேர்ப்பவனும்**
**உய்வா னுளன்னென் றுணர்"**

எனப் பாடினார்.

## முடிவுரை

திருமுறைகளின் இறுதியாக விளங்கும் இப்பெரிய புராணமும் சிவஞான போதத்தின் இறுதிச் சூத்திரமும் பொருத்திக்காட்டும் உண்மைப்பொருள் யாதெனில் சிவனடி யாரையும் சிவாலயங்களையும் சிவனெனவே கண்டு வழிபடுதல் வேண்டும் என்பதாகும்.

**"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந் தானு மரனெனத் தொழுமே"**

என்னும் 12ஆம் சூத்திரப் பொருளுக்கு இலக்கியமே பெரியபுராணம் என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை. இறைவனுடைய சிவந்த தாமரை மலர்கள் போன்ற திருவடிகளை அடையவிடாது தடுத்து நிற்கும் மலத்தினின்றும் விடுபட்டுச் சிவனடியார்களோடு மருவி மேலும் மயக்கம் நீங்குவதால் சிவனடியார்களின் திருவேடத்தையும் திருக்கோயிலையும் சிவபிரானே எனக் கண்டு தொழுது நிற்பர் என்பது சூத்திரப் பொருளாகும். இத்தகைய நிலையில் சீவன் முத்தர்களாக வாழ்ந்த வர்களே பெரிய புராணம் போற்றும் சிவனடியார்களாவர். இவர்களைப் பற்றி எழுதப்பட்ட இந்நூலுக்கு 'மாக்கதை' என்று பெயர் குறிக்கிறார் சேக்கிழார்.

**"எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்**
**நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்**
**தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்**
**கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம்".**

பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடப்பட்ட இச்சிவனடியார் சரித்திரத்தைப் படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பிறவியிலிருந்து மீளக்கூடிய பெரும் பேறு கிடைக்கும் என்பதையே முதலடியில் எடுக்கும் மாக்கதை' என்பதால் விளக்கு கிறார். 'எடுக்கும்' என்பது பிறவிக் கடலி லிருந்து தூக்கி எடுக்கும் என்னும் பொருள் விளக்கத்துக்குரியது. 'எடுக்கும் மாக்கதை' என்று இதனைக் குறிப்பிடுவதால் மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமல் உய்தி யளிப்பது இந்நூல் என்று புலனாகிறது.

இத்திருவருட் காவியத்தில் எக்கருத்தை எடுத்துக் கொண்டாலும் சைவசித்தாந்த அடிப்படையிலேயே அவை கூறப்பட் டுள்ளன. 'தோடுடைய செவியன்' என்று ஓங்காரத்தில் தொடங்கி 'உலகெலாம்' என மகர ஒற்றில் முடிக்கிறார். இதனால் திரு முறைகளனைத்தும் ஓங்காரத்தின் விரி வாதல் விளங்கும். ஆண்டவன் பெருமையில் தொடங்கி அடியவர்கள் பெருமையில் முடிவதைத் திருமுறைகளின் தொகுப்பிற் காண்கிறோம். திருமுறைகளை எமது உயிராகப் பேணி இறைகளோடு இசைந்த இன்பமும், இன்பத்தோடு இசைந்த வாழ்வும் வாழ்ந்து நற்பயனடைவோமாக.

**"என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட**
**மன்று ளாரடி யாரவர் வான்புகழ்**
**நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்".**

**நன்றி : உலக சைவப் பேரவை மாநாடு,**
**கொழும்பு.**
*சிறப்புமலர் – 1995*

# எமது தேவஸ்தானத்தில் நடைபெற்ற விழாவின் நினைவுகள்
# சென்னை சைவசித்தாந்த மகா சமாஜம்
## 75வது ஆண்டு நிறைவு பவளவிழா
# சைவ மங்கையர் மாநாட்டு தொடக்கவுரை

திருமதி. சிவநாயகி தியாகராசா அவர்கள்

உலகெலாம் மெய்யறிவு பெறவும், செந்தமிழ் தழைத்தோங்கவும் ஆணித்தர மான அறிவுத் தொண்டாற்றும் சைவசித் தாந்த மகா சமாஜத்தினர்களே, சான் றோர்களே, பெரியோர்களே, இன்றைய மகாநாட்டிற்குத் தலைமை தாங்கும் அம்மையாரே, சகோதரிகளே, உங்களை னவர்க்கும் என் உளம்கனிந்த வணக்கம் உரித்தாகுக.

அருட்பிழம்பாக விளங்கும் அன்னை துர்க்காதேவி ஆலய முன்றிலில் அழ கார்க்கும் மலர்ப்பந்தரின் கீழ் நடைபெறும் இச் சைவ மகாநாடு புறத்திருள் போக்கும் ஞாயிறே போன்று நம்மகத்து மண்டிக் கிடக்கும் அறியாமை இருளைத் துரத்தவல்ல ஒரு ஞான விளக்கோ என நினைக்கத் தோன்றுகிறது. “கண்ணுதற் பெருங்கட வுளும் கழகமோடரந்து பண்ணுறத் தெரிந் தாய்ந்த ஒண் தீந்தமிழில்” சைவசித்தாந்த நுண்பொருள்களாகிய ஞான மூலிகை களைப் பொதிந்து நமக்கருத்தப் பல பேரறிஞர்கள் இங்கே வந்துள்ளார்கள். இவர்களைக் கண்ணுறும் பொழுது பண்டைக்கால நினைவுகளே நமக்குத் தோன்றுகின்றன.

நுண்மான் நுழைபுலம் மிக்க நக்கீரர் முதலாம் பல புலவர்கள் ஒன்றுகூடிச் சங்கம் அமைத்து அமிழ்தினுமினிய நம் செந்தமிழ் மொழியின் செழுமையினையும் அழகினை யும் இனிமையையும் சொல் வளத்தினையும் நன்காராய்ந்து, அம் மொழி வளர்ச்சிக்கு வேண்டிய பல்வகைத் தொண்டுகளை ஆற்றிய சிறப்பே, இன்றுவரை தமிழ் அறிஞர்கள் பலர் தோன்றவும் அதன் சுவையில் மயங்கவும் தம்மாலியன்ற தொண்டுகள் தெய்விக மொழிக்கு ஆற்ற வும் காரணமாயிற்று. அவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வாழையடி வாழை யாக வந்த தமிழறிஞர்கள் பலர் ஆற்றிய தொண்டுகள் எல்லாம் ஒருங்கு திரண்டே இன்று அனைத்துலகத் தமிழராய்ச்சி மகாநாடாக மலர்ந்து, வேற்று மொழி பேசும் பிறநாட்டுப் பேரறிஞர்களும் வானளாவப் புகழும் அளவுக்கு நம்மொழி உயர்ந்து பெருமை பெற்றது.

அவ்வாறே அறிவுத்துறை தோய்ந்த பேரறிஞர்கள் பலர் ஒன்றுகூடி இச் சமாஜத்தினை அமைத்து அத்தமிழன்னை ஈன்றஞானப் புதல்வர்கள் நமக்கீட்டி வைத்த ஞான நீதிகளையும், அவற்றுள் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக் களையும் நன்காராய்ந்து உலகெலாம் வழங்க முன்வந்து சமாஜ சித்தாந்த ஏடாகவும் ஆங்கில இதழ்களாகவும் சொற்பொழிவுகளாகவும் வெளியிட்டு உலக மயக்கினின்றும் மனிதகுலம் விழித்தெழத் தம்மாலானவரை முயன்று அயராது உழைக்கின்றனர்.

ஆனால் இவர்கள் மேற்கொண்டுள்ள இத்தொண்டு மிக மிக ஆழமானதும், சொல்லால் விளக்குதற்கரிதானதும், மனிதகுலம் ஈடேற இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகவும் உள்ளதால் அரிதில் முயன்று ஆற்றப்படவேண்டிய ஒரு தவத்தொண்டாகுமிது என்பது மறுக்கப்படாத உண்மையாகும். எனினும், சிரமம் பாராது, "உழைப்பின் வாரா உறுதி களுண்டோ" என்னும் முதுமொழியை மனதிற் பதித்துக் கொண்டுழைக்கின் றார்கள். இவர்களின் பாராட்டத்தக்க இந் நன்முயற்சி பலிதமாகி இவர்களால் நடாத்தப்படும் நூற்றாண்டுவிழா அனைத் துலகச் சைவமகா நாடாக மிளிரவேண்டு மென எங்கும் நிறைந்த பரம்பொருளை வழுத்துவோமாக. கலையுடன் கூடி வளரும் இளமதியமே யென்ன இச் சமாஜம் வளர்ச்சி யடைந்து முழுப் பொலிவும் பெற்று அறிவு வானில் இயங்கும் ஞானமதியமே போல உலகெங்கும் தண்ணொளி பரப்புவதாக.

ஒரு காலத்தில் சைவம் உலகெங்கும் பரவியிருந்துள்ளதென்பதற்குரிய சின் னங்கள் பலவுள்ளன. அச் சின்னங் களைப் பற்றி 1944ஆம் ஆண்டு நடைபெற்ற பள்ளத் தூர் மகாநாட்டுத் தலைமையுரையில் திரு.ம.பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் செவ்வனே விளக்கியுள்ளார்கள். ஆங்கில அறிவு உலகெங்கும் பரந்திருக்கும் இந்நாளில் முன்னரும் பல பேரறிஞர்கள் நம் இந்து சமய உண்மைகளைப் பிறநாடு களில் விளக்கி வெற்றிபெற்றுள்ளார்க ளென்பதும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களில் பலர் இந்துசமயக் கொள்கைகளைப் பாராட்டியுள்ளார்களென் பதும், சிலர் கைக்கொண்டுள்ளார்களென்பதும் நாமறிந்த உண்மைகளே. இந்நிலையில் அறிவுச்சுரங்கமாக விளங்கும் சைவசித் தாந்தம் அங்கே நன்கு விரித்து விளக்கப் பட்டால் உலக அரங்கில் இச்சமயம் ஒரு உயர்ந்த ஸ்தானத்தைப் பெறுமென்பதில் ஐயமில்லை.

செந்தமிழ் மந்திரங்களால் நிரப்பப்பட்டி ருக்கும் திருவாசகத்துக்கு உரை எழுதிய ஆங்கிலத் துரைமகனார் போப் என்பவர் தமிழர்களின் பேரறிவின் பயன் சைவசித் தாந்தக் கொள்கை எனக் குறிப்பிட்டுள்ளார். அதனோடு திருவாசக மொழி பெயர்ப்பின் முகவுரையில் இந்தியாவிலுள்ள சமயக் கொள்கைகள் எல்லாவற்றிலும் சித்தாந்தக் கொள்கையே சிறப்புடையதெனக் கூறி யுள்ளார். கௌடி எனப் பெயர் கொண்ட பாதிரியார் ஒருவரும் இக்கருத்தை வலி யுறுத்தியதோடு இன்னும் பல சிறப்புக் களைக் கூறியுள்ளார்.

இச் சைவமதத்தின் பழைமை அழகை ஆராய்ந்த அறிஞர்கள் கி.மு. 4000 ஆண்டு கட்கு முன்னரே இச் சமயம் நிலவியுள்ள தெனக் கூறுகின்றார்கள். புதைபொருள் ஆராய்ச்சிக்காரர் சிந்துக்கரையில் அகழ்ந் தெடுத்த பல சிவலிங்கங்களும் மற்றும் பல புதைபொருள்களும் இவ்வுண்மைக்குச் சான்றுகளாகின்றன. இத்தகைய பழைய சமயம் இன்றைய விஞ்ஞான முன்னேற்றக் காலத்திலும் தன்னுண்மை குன்றாமல், பட்டைதீட்டிய வைரமணி போன்று அறிவுத் துறையில் எல்லாப் பக்கங்களிலும் பிரகா சித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், மெய்ஞ்ஞானிகளின் மெய்யறிவினின்றும் பிறந்த உண்மைகளே சைவசித்தாந்தமாக அமைந்திருப்பதேயாகும். சித்தாந்தம் என்பதன் பொருளே முடிந்த முடிவு என்பதேயாகும். பதி, பசு, பாசம் ஆகிய

முப்பொருளியக்கத்தினை முடிவு படுத்திக் கூறும் நுட்பமுடையது சைவசித் தாந்தம். ஆதிகாலமாகிய வேதகாலமுதல் பரத கண்டத்தில் வேரூன்றியுள்ள சமயத் துறைகள் அனைத்தையும் ஆராய்ந்து தனக்குள் அடக்கிக்கொண்டு அதற்கு மேலும் விரிந்து நுண்மை மிக்க ஞானப் பொருள்களை விளக்குவது சைவசித் தாந்தம். "அறு வகைச் சமயத்தவரைத் தேற்றுந் தகையன" என்பது அப்பரடிகளின் திருவாக்கு. வேதா கம சாஸ்திரங்களில் பொதிந்திருந்த ஆழ்ந்த ஞானப்பொருள் களை யெல்லாம் கடைந்தெடுத்துத் திரட்டிய ஞானாமிர்தமே சைவசித்தாந்த மாகும்.

**"ஒருமவே தாந்தமென் றுச்சியிற் பழுத்த**
**ஆரா இன்ப அருங்கனி பிழிந்து**
**சாரங் கொண்ட சைவசித் தாந்தத்**
**தேனமு தருந்தினர் சிலரே".**

என அதன் ஞானச்சுவையை அனுபவித்த குமரகுருபர அடிகள் கூறியுள்ளார்.

சைவசமயாசாரியார்களாகிய நால் வரும் பக்திச்சுவை சொட்டச் சொட்ட இறைவனை வழுத்திய ஞானப்பனுவல்களி லெல்லாம் இச் சித்தாந்தத் தேனூறி நின்று சுவையளிப்பதை நாம் உற்றுணரலாம். சாமுசித்தராகிய மெய்கண்டதேவர் இயற்றிய சிவஞானபோத அறிவு நூலிலும் அந்நூலை முதனூலாகக் கொண்டெழுந்த சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய சித்தாந்த சாஸ்திரங்களிலும் இச் சித்தாந்தத் தேன் தேங்கி நின்று சுவையளிப்பதோடு கலங்கரை விளக்கம் போன்று இப் பிறவிக்கடல் நீந்தி நாம் இன்பத்துறை சேர வாய்ப்பான நேர்வழியையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. இந்நூல்களை முறையே கற்பார்க்கே சைவசித்தாந்தம் எவ்வளவு ஆழமான ஞானப்பொருளை விளக்குகின்றதென்பது புலனாகும்.

சிவஞானபோதத் தெய்வீக நூலைக் கற்றுணர்ந்த பெரியோர்கள்,

**"வேதம் பசுவதன்பா் மெய்யாக மம்நால்வ**
**ரோதும் தமிழதனி னுள்ளுறைநெய் - போதமிகு**
**நெய்யினுறை சுவையாம்நீள் வெண்ணெய் மெய்கண்டான்**
**செய்ததமிழ் நூலின் திறமை"**

என அந்நூலினைப் பாராட்டினர். ஞானத்தின் திருவுருவாக விளங்கிய மாணிக்கவாசகப் பெருமானாரை ஆட் கொள்ளக் குருந்தமர நிழலில் அமர்ந்தி ருந்த முழுமுதற் பதியாகிய இறைவன் இச் சிவஞானபோத நூலினையே தமது திருக்கரத்தில் தாங்கியுள்ளார் எனத் திருவாதவூரர் புராணம் நமக்குத் தெரி விக்கின்றது. இறைவன் கரத்தில் அந் நூலினைக் கண்ணுற்ற மணிவாசகனார் "செங்கை மீது பொருத்தமுறும் புத்தக மேதையா" என வினவ இறைவனார் "பொய்ம்மையிலாச் சிவஞானபோதம்" என்றனர். அப்பொழுது மணிவாசகனார் "சிவமேது ஞானமேதிங் கிலங்கியிடும், போதமே தியம்புவீரேல் அன்று வட நீழலில் வந்திருந்தார் நீரே. அடியேனு முமக்கடிமையாவேன்" என்று பணிபோடு நற்பொருள் வினவித் தொழ இறைவன் "நின்ற சிவமொன்று அதனைத் தேர் தன் ஞானம் நிகழ்போதந் தேர்ந்ததனைத் தெளிதலாம்" எனப் பொருள் விளக்கிய சிறப்பு உற்றுணர்தற் பாலதாம். சைவசித் தாந்தத்தின் உயிர்ப்பு இப்பொருள் விளக் கத்தில் அமைந்து கிடக்கும் நுட்பத்தை யாம் காணகின்றோம்.

**"சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்**
**செனன மொன்றிலே சீவன்முத்த ராக**
**வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி**

**மடுத்தானந்தம் பொழிந்து வரும்பிறப்பை யறுத்து**
**முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று**
**மொழிந்திடவும் முலகரெல்லா மூர்க்க ராகிப்**
**பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்**
**படுகுழியில் வீழ்ந்திடுவ ரிதுஎன்ன பிராந்தி"**

என வினவினார் ஞானச் செல்வராகிய அருணந்தி சிவாச்சாரியார். இச் சித்தாந்தத் தேனமுதை அருந்தி அதன் ஞானச் சுவையில் மூழ்கியவர்கள் ஆசை தருமுலகமெலாம் அலைகைத் தேரா மென வுணர்ந்து துறவு பூண்டு வீடு பேற்றை யடையவே உந்தப்பட்டார்கள் என்பதனை அறிகின்றோம். அத்துணைச் சிறப்பு வாய்ந்த சைவசித்தாந்தம் நமக்குப் பிறப்புரிமை யாகக் கிடைத்தும் அச்செந்நெறியைப் பின்பற்றியொழுகிப் பிறவிப் பெரும் பயனடைய விரும்பாது, உலகச் சகதியில் உழன்று கொண்டிருக்கின்றோம். ஆகை யால் துன்பம் தரும் இப் பிறவிக் கடல் நீந்தி இன்பத்துறை சேர்க்கும் நம் சமய உண்மைகளை நாம் அறியவேண்டியது அவசியம். சைவசித் தாந்தம் கூறும் உச்ச ஞான நிலைக்கு நாம் போகாவிட்டாலும் நம் சமயம் கற்பிக்கும் நல்லொழுக்கத் தையும் இறை யன்பையுமாவது கைக்கொண் டொழுகி நம் வாழ்க்கையை அலங்கரிக்க வேண்டியது முக்கியமாகும். உணவிலும் உள்ளத்திலும் தூய்மையை முதற்படி யாகப் பெற்றாவது நம் சமயத்தைச் சிறப்பிப்பது ஒவ்வொருவருக்கும் நீங்காத முதற் கடமையாகும். இன்றேல் தூய்மை யும் பெருமையும் மிக்க நம் சமயத்தை நாம் கறைப்படுத்தியவர்களாவோம்.

இங்கே துர்க்காதேவி சந்நிதானத்தில் சைவசித்தாந்தமாகிய ஞானசமுத்திரம் அலைமோதுவது போன்ற உணர்ச்சியை நேற்றுக் காலை முதல் பெறுகின்றோம். ஆலயங்கள் அருட்பொலிவு கொண்டு விளங்குவதோடு சமய வளர்ச்சிக்கு நிலைக்களனாகவும் சமுதாய நல்லொ ழுக்கத்திற்கு அரண்களாகவும் விளங்கி னால் நன்மைகள் பலவுண்டாம். இத்தகைய மகாநாடுகள் இன்று கூடி நாளை மறக்கும் நீர்மையன அன்று. அழியாத சித்திரமாய் நம்முள்ளத்திற் பதிய வேண்டியனவாம். அணையாத விளக்காக நம் சிந்தனையில் விளங்க வேண்டியனவாம். முன்னர் மூன்றுமுறை இச்சமாஜ மகாநாடுகள் யாழ்ப்பாணம், கொழும்பு, திருக்கேதீச் சரம் ஆகிய மூன்று இடங்களிலும் ஈழத்தில் நடைபெற்றன. அம்மகாநாடுகள் அறிஞர் உள்ளங்களில் பசுமையாக இன்னும் நிறைந்திருக்குமென நம்புகிறேன். ஆனால் இச் சமாஜத்தாரின் முக்கியத்துவம் வாய்ந்த எழுபத்தைந்தாம் ஆண்டுப் பவளவிழாவை நாம் நித்தமும் வணங்கும் ஆலய முன்றிலில் பெற்றது, உலகீன்ற அன்னை பராசக்தி நமக்களித்த கும்பாபி ஷேகப் பிரசாதமெனக் கருதி சமய வாழ்வின் முதற்படியிலாவது நாம் கால் எடுத்துவைக்கத் திடசங்கற்பம் செய்ய வேண்டுமெனக் கூறுதல் இன்று அத்தியா வசியமானதாகும். இன்றேல் எவ்வளவோ பொருட்செலவில் எத்தனையோ அறிஞர் களின் உழைப்பினால் உருவாக்கப்படும் இம் மகாநாடுகள் பயனற்றனவாகிவிடும்.

மனித சமுதாயத்தின் முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தம் அறிவுத்திறனை எல்லாம் திரட்டி ஒப்பு யர்வற்ற நம் சமயத்திற் பொதிந்து கிடக்கும் பேருண்மைகளைத் திறம்பட விளக்கிச் சமய முழக்கம் செய்து மக்களைச் சமய வாழ்வில் கருத்தூன்றச் செய்ய இங்கே பேரறிஞர்கள் எவ்வளவு சிரமம் எடுக்கி

றார்கள் என்பதைக் கூறவேண்டியதில்லை. தாம் பெற்ற இன்பம் எல்லாரும் பெறவேண்டு மென விரும்புகிறார்கள். இவர்களின் அறி வுரைகளைக் கருத்தூன்றிக் கேட்பீர்களாயின் நீங்கள் ஆன்ம தூய்மை பெற்றுச் சமய வாழ்வை மேற்கொண்டு பேரின்பம் பெறவே விழைவீர்கள் என்பதில் ஐயமில்லை.

**"கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்**
**கொற்கத்தி னூற்றாந் துணை"**

என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவாக்கு.

இன்று சைவமங்கையர் மகாநாடு, அவர்கட்கு வேண்டிய அறிவுரைகளை இன்று இங்கே சொற்பொழிவாற்ற வந்துள்ள பெண்ணறிஞர்கள் விரித்துக் கூறுவார்கள். ஆகையால் நான் அதிகம் அவர்களைப் பற்றிக் கூறவில்லை. எனக்களிக்கப்பட்ட பதினைந்து நிமிஷக் கால எல்லையில் எதனையும் விரித்துக்கூற இடமுமில்லை. அன்பு, ஈகை, இரக்கம், தியாகம், கற்பு ஆகிய பல நற்குணங்களை இயல்பாகப் பெற்றுள்ள பெண்கள் சமய அறிவும் பெறுவார்களாயின் பொன்மலர் நாற்றம் பெற்ற ஒரு சிறப்பினை அடைவர் என்பதனை மட்டும் கூறி அமைகின்றேன். இச்சமாஜத்தாரின் தொண்டுகள் விரிந்து உலகெலாம் பரவுவதாக, இறைவன் திருவருள் இவர்கட்கு முன்னின்று உதவுவ தாக.

வளர்க சிவநெறி! ஓங்குக தமிழ்மொழி!

**"அரியது மாநுட யாக்கை – அதை**
**அருள்வது முன்புசெய் புண்ணியச் சேர்க்கை**
**வெரியதிப் பேற்றுள்ள போதே – வினைப்**
**பிறவி கெடநினைப் பேணுநல் லெண்ணம்**
**பெறுதற் கரியதிப் பேறு – எனினும்**
**பெரிது மவதி யிதன்நிலை பேறு**
**அறிதற் கரியது மரணம் – வரும்**
**அதற்கு முன் சிவனருள் தேடுநல் லெண்ணம்".**

– சிவயோக சுவாமிகள்



# எம்மண்ணில் வாழ்ந்த மண்ணின் மணிவிளக்கு

## வல்வெட்டித்துறை
## புலவர் சங்கரநாதர் வைத்தியலிங்கம்பிள்ளை
## (1843 – 1901)

**இவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் பிறந்தவர். சிறந்த சைவத்தமிழறிஞர். உடுப்பிட்டி சிவசம்புப்புலவரின் மாணவர். சிந்தாமணி, நிகண்டு, கந்தரலங்காரம் முதலியவற்றுக்கு உரை எழுதியவர். சைவ மகத்துவபானு என்ற கண்டன நூலை வெளியிட்டவர். பாரதி நிலைய முத்திராட்சகசாலை (அச்சகம்) நிறுவியதோடு, ஒரு தமிழ்ப்பாடசாலையை 1878இல் ஆரம்பித்தவர். "நிம்பியாகப் பொருள்" என்ற இலக்கண நூலுக்கு விளக்கம் எழுதியவர். சூரபத்மன் என்ற நூலையும் சைவ அபிமானி என்ற பத்திரிகையையும் வெளியிட்டு பாராட்டுப் பெற்றவர்.**

# நீர்த்தலம் : திருவானைக்கா

ச. தண்டபாணிதேசிகர்

மலர் திருவண்ணாமலைக் குடநீராட்டு மலர். அதில் மலர்கிறது. திருவானைக் காவைப் பற்றிய செய்தி மணம். ஆம்; திருவண்ணாமலைக்கும், திருவானைக்கா விற்கும் பலவகையில் நெருங்கிய தொடர்பு உண்டு.

உலகப்படைப்பிற்கு மூல காரணம் ஐம்பெரும் பூதங்கள் ஐம்பெரும் பூதங் களாயும் அவற்றில் எழுந் தருளியிருக்கும் இறையாயும் விளங்கு பவன் சிவபெருமான். திருவண்ணா மலை, தீத்தலம். அதாவது இறைவன் தீ வடிவாகத் தோன்றிச் செருக் குற்றார்க்கு அண்ணாமலையாய் நின்ற தலம். திருவானைக்கா நீர்த்தலம். இறைவன் நீரில் நீராகத் தோன்றி உறையும் தலம். தீக்கும் நீருக்கும் உள்ள உறவுமுறையும் தாயும் சேயும் என்கின்றன வேதங்கள். "அக்னியிலிருந்து ஆப:" என்பது உபநிடதம். "தீமுரணிய நீரும்' எனப் புறநானூறு தீக்கும் நீருக்கும் ஒன்றையொன்று அழிக்கும் மாறான தன்மையுண்டு என் கிறது. தீக்குரிய தன்மை ஒளி. நீருக்குரிய தன்மை சுவை. இவையிரண்டுமே தன் மாத்திரைகள்; இவற்றையடியாகக் கொண்டு தீயும் நீரும் தனித்தனியே தோன்று கின்றன. ஆனாலும் இறைவன் இவை யனைத்திலும் கலந்து நிற்கின்றான். ஆகையால் இவையிரண்டும் தொன்று தொட்டே இயைபுடையன என்னும் சைவ நூல்கள். எங்ஙனமாயினும் இறைவன் "இருநிலனாய்த் தீயாகி விசும்புமாகி..... எறியுங் காற்றுமாகி" இருப்பதால் ஐந்துமே அங்கமும் அங்கியுமாகிய தொடர்பு டையன. ஆதலாற்போலும் திருவண்ணா மலை மலரில் திருவானைக்காவை எழுதப் பணித்தார்கள்.

## தலம்

ஓரிடத்திற்குப் பெருமை அங்குள்ள மக்களாலும், அருள் வழங்கும் ஆண்டவ னாலும், ஆண்டவன் அருள்நிறைந்த தீர்த்தங்களாலுமே விளையும். இத்தலம் தொன்மையானது. காவிரியாற்றின் வட கரையிலே தெங்கும் மாவும் பலாவும் பல வகைப்பூ மரங்களும் செறிந்த தெய்வீகச் சூழலில் உள்ளது. இயற்கை எழில் இலங்க நிற்பது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் ஒருவர்,

**கற்ற வௌதிகம் சுற்றிவந் தறிவுக்**
**கைகுவித் தேத்திடச் சிறந்து**
**மற்றுமிங் குள்ள மண்முதல் நான்கில்**
**மடுத்துயிர் களித்திட வென்றே**
**உற்றதண் ணீரின் உருவினில் தனக்கென்**
**றென் றுமில் லாப்பர சிவமே**
**பற்றுடன் அமர்ந்த பவித்திர மதற்கிப்**
**பாரினில் ஈடிணை யுளதோ**

என்று இத்தலத்திற்கு ஈடானதும் இல்லை; இணையானதும் இல்லை என்று சாதிக்கிறார்.

## பெருமானும் பெருமாட்டியும்

பெருமான் "ஆனைக்காவில் ஆதி", அம்மை உலக முழுதுடையாள்; பெருமான் நீரையே வடிவாகக் கொண்டு தண்ணியராய் எழுந்தருளியுள்ளார். அம்மை, இன்றும், என் என்றும் மக்களுய்ய அருள் வழங்கும் அருட் கருவூலமாய் எழுந்தருளியிருக்கிறார்.

பெருமான், சந்திர தீர்த்தக் கரையில் உள்ள வெண்ணாவல் மரத்தின்கீழ் ஆன்மாக் களாகிய நம்மீது வைத்த தடையிலாக் கருணையால் தானே தோன்றியவர். அவரை வெள்ளானை வழிபட்டு வந்தது. வெண்ணாவற் சருகுகள் இறைவன் மேல் உதிர்வதைக் கண்ட சிலந்தியொன்று திருமுடியின் மீது வலை பின்னிச் சருகு வீழாத வண்ணம் காத்து வந்தது. ஆனை அதனை வாய் நூல் எச்சில் இறைவன் மீது படலாகாதே என்று அழித்து அன்றாடம் பூசித்து வந்தது. சிலந்தி சினந்து ஒரு நாள் அதன் துதிக்கைத் தொளையிற் புகுந்து யானையைக் கொல்ல முயன்றது. யானை துதிக்கையைத் தரையில் அறைந்து அறைந்து இறந்தது. சிலந்தியும் இறந்தது. இறைவன் யானைக்கு இன்பவுலகு அளித்தார். சிலந்தியைச் சோழனாக்கினார். இந் நிகழ்ச்சிகளை, மறந்தும் மனிதரைப் பாடாத சமயப் பெருந்தகையார் அப்பர் சுவாமிகள்

**சிலந்தியும் ஆனைக்காவில்**
**பந்தர் செய்து**
**உலந்தவன் இறந்தபோதே**
**கோச்செங் கணானுமாக**
**கலந்தநீர் காவிரிசூழ்**
**சோணாட்டுச் சோழர் தங்கள் குலந்தனிற்**
**பிறப்பித்திட்டார்**
**குறுக்கை வீரட்டனாரே**

என்று சிறப்பித்திருக்கிறார்கள். ஞான சம்பந்தப் பெருமான் "சிலந்தி சோழனாகச் செய்தான்" என்றருளுகின்றார்கள்; சுந்தரரோ

**தெருண்ட வாயிடை நூல் கொண்டு சிலந்தி**
**சித்திரப் பந்தர் சிக்கென இயற்ற**
**சுருண்ட செஞ்சடையாய் அதுதன்னைச்**
**சோழனாக்கிய தொடர்ச்சி கண்டடைந்தேன்**

என்கிறார்கள்.

இத்தலம் வரலாற்றுலகத்திலே சங்க கால முதல் பிரபந்தகாலம் வரையில் மிக மிக விளக்கமும் ஏற்றமுந் தோற்றமும் பெற்றதாகத் தமிழ் நூல்களும் கல்லெழுத் துக்களும் காட்டுகின்றன. சோழன் கோச் செங்கணான் சோழ மரபில் தொன்மை வாய்ந்தவன். இவனே இக் கோயிலை முதன் முதல் செங்கற் கோயிலாக எழுப்பிச் சிவபுண்ணியங் கொண்டவன். முற்பிறப்பு வாசனையின் வண்ணம் கருவறை முகப்பு வாயிலையானை 'புகா வாயிலாகக் கட்டினான். பின்னர் 9ம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் கருங்கற் பணியாக்கிக் களித்தான். கி.பி. 13ம் நூற்றாண்டில் இரண்டாம் சுற்றாலையும் மூன்றாம் சுற்றாலையும் சோழ மன்னர்கள் எழுப் பியவையே. மூன்றாம் சுற்றாலையில் உள்ள கார்த்திகைக் கோபுரமும் கீழ்ப்புற முள்ள சங்கமேசர் கோபுரமும் குலோத் துங்கன் கட்டியவை. நான்காம் சுற்றாலை 13ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுந்தது. 4ம் சுற்றாலையிலுள்ள கீழைக் கோபுரம் சுந்தர பாண்டியனால் கட்டப்பெற்றது. அதனால் அது இன்றும் சுந்தரபாண்டியன் கோபுரம் என்றே வழங்கப் பெறுகிறது. இக் கோபுரத்தை நிறைவு செய்தவர் போசள மன்னர்.

இங்ஙனம் திருக்கோயிலைத் திருப்பணி செய்தவர்கள் ஆதித்ய தேவன் மகன் சரபேந்திரன் (கி.பி. 15ம் நூற்றாண்டின் முற்பகுதி) இராச இராசன், வீரசோமேசன், குருசதாசிவர், கோயிலய்யனும் அவன் மகனும், விசயரங்க சொக்கநாத நாயகர், நாட்டியச்சாலையில் நாட்டிய மாடிய ஆசிரியன் வேங்கடேசய்யன் மகன் வைத்தியப் பய்யன் முதலான பலராவர்.

பல்லவ – சோழ – பாண்டிய – போசள – நாயக்க மன்னர்கட்குப் பின்னே நாடு பலவகையிற் சீர்கெட்டிருந்தது. அப்போ தெல்லாம் திருக்கோயில் பணிகள் செம்மையாக நடைபெற வசதி வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவாயின. அந்தக் காலத்தில் அதாவது 19, 20ம் நூற்றாண்டுகளில் நகரத் தன வணிக வள்ளல்கள் பலர் பாடல் பெற்ற சிவத்தலங்களைப் பணி செய்து பாதுகாத்து வந்தனர். கோச்செங்கணான் எண்டோளீசற்கு எழில் மாடம் எழுபது செய்தான் என்பர் திருமங்கை மன்னன். நகரத்தார்களோ சற்றேறக்குறைய என் பயணத்திற் கண்டவரை பெரிய கோயில் களாக எண்பதுக்கு மேற்கட்டி, நாள் வழிபாட்டிற்கும் சிறப்பு வழிபாட்டிற்கும் வகை செய்துள்ளனர்.

திருவிளக்குத் தொண்ணூறு ஆடு கொடுத்தவன் முப்பது பசுக்கள் கொடுத்தவன் இருபத்திரண்டு கழஞ்சு பொன் கொடுத்தவன் இவர்கள் புண்ணியம் கல் எழுத்துக்களிற் காணப்பெறுவது போல பல கோடி ரூபாய்கள் தந்த நகரத்தார் பணிகளையும் அந்தந்தக் கோயிலிற் கல்லிற் பொறித்து வைத்தால் அது காலங்கடந்த பிறகு வரலாற்றுக் குறிப்பாகப் பயன்படுமே. திருப்பணி செய்தவர்கள் தம் புகழ் வேண்டாத் தகையாளர்கள் ஆதலால், அவர்கள் எழுதி வைக்கவில்லையானலும் இன்று வரலாறு எழுதும் ஆசிரியர்களாவது அனைத்தையும் தொகுத்து எழுதினால் அது ஒரு பதிவுப் பத்திரமாகச் சமய வளர்ச்சி – சமயப் பாதுகாப்பு வரலாற்றுக்குச் சான்றாக விளங்குமே என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

திருவானைக் கோயிலை 19ம் நூற் றாண்டில் கானாடு காத்தான் திரு.சா. ராம.சித. சிதம்பரஞ் செட்டியார் திருப்பணி தொடங்கினார்கள். 1908இல் முடித் தார்கள். அதுபோல இத் திருவண்ணா மலைத் திருக்கோயிலும் நகரத்தார் பேரன்பிற்கு உரியதாகித் திருப்பணிச் சிறப்புக்களைப் பெற்ற தலம் ஆகும். இங்குள்ள இடப வாகனம் ஒன்றே அவர்கள் பணிக்குச் சான்று சொல்லுமே. அவர்கள் கணக்கேடுகளிலும் கைக் குறிப்புக்களிலும் எழுதிக் களிக்கும் அண்ணாமலையார் துணை என்னும் எழுத்தே அவர்கள் பேரன்பின் எல்லையைப் பேசுமே.

ஆதலால் நகரத்தார் சிவப்பணி என்ற தலைப்பிலே ஒரு தொகுப்புப் பணி நடைபெறுமாயின் அதனைக் கொண்டு சைவ நல்லுலகம் சரித்திரப் புகழ்பெற்று மிளிரும்.

# சேக்கிழார் காட்டும் திருமணம்

**முதுமுனைவர் மா. சா. அறிவுடை நம்பி**
**தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' எனப் புகழப்படும் தொண்டை நாட்டில், குன்றத்தூரில் வேளாண்குடியில் தோன்றிய சேக்கிழார் அருளிய பெரியபுராணத்திற்குத் தனியானதொரு சிறப்புண்டு. இப்பெரியபுராணத்தில் பேசப்பெறும் சிவனடியார்கள் பல்வேறு ஊரினர்; பல்வேறு காலத்தினர்; பல்வேறு மரபினர். அனைவரும் சிவபிரானையே முழுமுதற் பரம் பொருளாகக் கொண்டு ஒழுகியோராவர். இவ் அடியார் பெருமை கூறும் இந்நூலுக்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' ஆகும். ஆயின் இன்று 'பெரியபுராணம்' என்பதே பெருவழக்காயுள்ளது.

பெரியபுராணத்தில் பேசப்பெறும் அடியார்கள் அனைவரும் செயற்கரிய செய்த பெரியவர்கள். எனவேதான் இது பெரியபுராணம் எனப் புகழப்படுவதாயிற்று. அதனால்தான்,

"செயற்கரிய செயல் செய்த பெரியோர் வரலாற்றைக் கூறுவதாலும், ஓதுவோருக்குப் பெருமை சேர்ப்பதாலும், சிவன் பெருமையை, அச்சிவபிரான் அடியார்க்கு எளியனாக எழுந்தருளிய அருமையில் எளிய பெருமையை எடுத்து விளக்குவதனாலும், முன்னும் பின்னும் இதனையொத்த பெருமையுடைய நூல் தோன்றாமையாலும் பெரியபுராணம் என்று பாராட்டப்பெறுகிறது"

என்று மறைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிடுவதும் எண்ணி மகிழத்தக்கது.

சேக்கிழார் அமைச்சராக இருந்தமையினால் தமிழகம் முழுவதும் களப்பணியாகச் சென்று பல்வேறு செய்திகளைச் சேகரித்துத் தம் காப்பியத்தில் அவற்றைப் பதிவு செய்துள்ளார். சேக்கிழார் பாட எடுத்துக் கொண்ட காப்பியக்கதை மாந்தர்கள் அடியார்கள், கற்பனைப் பாத்திரங்கள் அல்லர். இவர்கள் இந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் தோன்றிப் பணி செய்தவர்கள். இக்காப்பியத்தில் இடம்பெறும் பல்வேறு வாழ்க்கை நெறிகளுள் திருமணமும் ஒன்று. இக்காப்பியத்தில் சேக்கிழார் அக்காலத்தில் இருந்த பல்வேறு திருமணச் சடங்கு முறைகளைப் பதிவு செய்துள்ளார். அவற்றைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம்.

அக்காலத்தில் திருமணத்திற்கு முன்பு, மணமகனின் வீட்டைச் சார்ந்த முதியோர் சிலர், பெண்ணின் பெற்றோரை நாடி மணம் பேச வருவர் (காரைக்காலம்மையார் புராணம் 16, மானக்கஞ்சாற நாயனார் 16) அங்ஙனம் மணம் பேச வருவோர், அறிவின் மிக்கோராயும் இருப்பர். பெண்ணின் குலம் மட்டுமின்றி, அவளின் குணத்தையும் விரும்பினர் (திருநாவுக்கரசு நாயனார் 23) இதையே சி.கே. சுப்பிரமணிய முதலியார்,

"மணம் செய்தற்கண் உளங்கொள்ள வேண்டிய இன்றியமையாத பொருள்கள் குலம், குடி, உரிமை என்ற இம்மூன்றுமாம் என்பது முந்தையோர் வழக்கு" என்பார்.

திருஞானசம்பந்தருக்கு அவரது பெற்றோர் திருமணம் செய்ய நினைத்துச்

சாதக முறைப்படிச் சடங்கு பார்த்ததாகச் சேக்கிழார் கூறுவதன் (திருஞானசம்பந்த நாயனார் 1043) மூலம் சாதகம் பார்த்தலும் உண்டு என்பதை அறிய முடிகிறது.

மகட்பேசவரும் முதியோர் ஒத்த குடியும், மரபும் பார்த்தரோடு இவற்றிலும் மேலாய சிவனடித் திறமுடைமையையும் கருதினர் (மானக்கஞ்சாற நாயனார் 16).

இக்காலத்தில் மணமகளுக்குப் பணம் பெரிதும் தருதாகிய வழக்கம் இருப்பது போல, அந்நாளில் பெண்ணுக்கு விலையாகப் பணம் கொடுத்தனர் என்னும் செய்தியை அறிய முடிகிறது (திருஞான சம்பந்த நாயனார் 480). இரு வீட்டாரும் பேசிமுடித்த பின், பெண்ணின் பெற்றோர், தம் மகளைக் கொடுக்க இசைவு தெரிவிப்பர் (திருநாவுக்கரசு நாயனார் 24)

இவை மணநிகழ்ச்சியின் இன்றியமையாத முதற் பகுதியாகும். இதிலிருந்தே மணவினையும் தொடங்குகிறது.

இங்ஙனம் இருதிறத்தாரும் இன்னானுக்கு இன்னவள் எனப் பேசி உறுதி செய்துவிட்டால், அதில் மாற்றம் எதுவும் நிகழக்கூடாது. எதிர்பாராதவிதமாகத் திருமணம் தடைப்பட்டால், பின் விளைவு யாது என்பது குறித்துச் சேக்கிழார் திலகவதியார் வரலாற்றில்,

**"எந்தையும் எம் அனையுமவர்க் கெனைக்கொடுக்க**
**விசைந்தாரக்ள் அந்தமுறை யால் அவர்க்கே**
**உரியதுநான் ஆதலினால் இந்தவுயிர்**
**அவருயிரோ டிசைவிப்பன் எனத் துணிய"**
*(திருநாவுக்கரசு நாயனார் 32)*

முற்பட்டபோது, மருணீக்கியார், அவர்தம் அடியிணையில் விழுந்தார். எனவே, தம் தம்பிக்காக உயிர் தாங்கினார் திலகவதியார். எனவே, திருமணப் பேச்சு முடிவானபோதே, ஆன்றோரால் உறுதி செய்யப்பட்டவனையே மணமகனாக எண்ணி வாழும் பெற்றியும் மணமகளாக ஆகப்போகும் ஒருத்திபால் இருந்தது என்ற நிலையையும் காணமுடிகின்றது. இத்தகு நிலையை இக்காலத்தும் சில குடும்பப் பெண்கள் கடைப்பிடித்து ஒழுகி வருவதைக் காணமுடிகிறது.

பொதுவாகப் பண்டை நாளில் மணப் பருவம் ஆணுக்குப் பதினாறு வயதும், பெண்ணிற்குப் பன்னிரண்டு வயதுமாகக் கணக்கிடப்பட்டது என்பதை இறையனார் களவியல் உரை (சூத்.1) கூறுகிது. பெரியபுராண காலத்தும் இது வழக்கில் இருந்ததாகக் கருதமுடிகிறது.

நம்பியாரூரர், சிறுதேர் உருட்டும் பருவமாகிய மூன்றாவது வயது முதல் மணப்பருவமாகிய பதினாறாவது வயது வரை அரசரது அரண்மனையில், காதற் பிள்ளையாய் வளர்ந்து வந்தார். (தடுத்தாட் கொண்ட புராணம் 6). திருஞான சம்பந்தர் புராணத்தில்,

**"திருவளர்ஞா னத்தலைவர் திருமணஞ் செய் தருளுதற்குப்**
**பருவமிது வென்றெண்ணி அறிவிக்கப் பாங்கணைந்தார்"**
(திருஞானசம்பந்தர் 1155)

என்பதில் வரும் பருவம் என்பதற்குச் சிவக்கவிமணி, திருமணப் பருவம் இஃது ஆண்பாலார்க்குப் பதினாறாட்டைப் பருவத்தில் நிகழுமென்பது தமிழ் மரபு என்று விளக்கம் தருகின்றார்.

திருமணத்திற்கு உறுதி செய்யப்பட்ட பின், மணநாள் குறித்து ஓலை எழுதுதல் மரபு. இதற்கு நாளோலை அல்லது திரு நாளோலை என்று பெயர்
(காரைக்காலம்மையார் 10).

மணமாகும் ஆடவனின் வலது கையிலும், பெண்ணின் இடது கையிலும் கயிறு கட்டுதல்

மரபு. இக்கயிறு பொன்நாண் எனப்படும். கட்டிய நாளிலிருந்து மணநாள் வரை இதை அவிழ்ப்பது கிடையாது. மணமக்களை எந்தத் தீமையும் அணுகாதபடிக்கு காவல் செய்வ தாகலின் இதற்குக் காப்பு என்று பெயர். வேறு பல காப்பு, வரையறை கடவுட்காப்பு என்பர் சேக்கிழார் (தடுத்தாட்கொண்ட 12, திரு ஞானசம்பந்தர் 43, கண்ணப்பர் 18)

மணநாளன்று மணமகனைக் குதிரை மீது அமரச் செய்து மணவீட்டுக்கு அழைத்து வருதல் உண்டு. மங்கல மகளிர் நிறைகுடம், விளக்கு, தூபம், மலர்மாலை, முளைப்பாண் டில், புனுகு, கஸ்தூரி முதலிய வாசனைப் பொருள்களை நன்கு உறைத்துக் கட்டிய கலவைச் சாந்து ஆகியவற்றை ஏந்தி மணமகனை வரவேற்பது மரபு (தடுத்தாட் கொண்ட புராணம் 19, திருஞானசம்பந்தர் 1227, 1228)

திருமண நாளன்று நகரையும், திரு வீதிகளையும், திருமனையையும் நிறை குடம், விளக்கு முதலியவற்றால் அலங் கரிப்பர் (திருஞானசம்பந்தர் 1170)

மணமகனின் கால்களைப் பால் கொண்டு நீர் வார்த்து விளக்குதல், மண மகளைப் பெற்ற அன்னையார் செய்தலும் உண்டு. திருமணத்தின் போது, கன்னியைக் கொடுத்தேன் என்று சொல்லி, நீர் வார்த்து, மணமகளை மணமகனது கையில் ஒப்ப டைத்தல் மரபு (திருஞானசம்பந்தர் 1232)

இந்நாளில் மங்கலநாண் பூட்டுதலுக்கு நல்ல நேரம் பார்ப்பது போல, அன்றும் இவ்வழக்கம் இருந்தது. இதனைச் சேக்கிழார் பழுதில் நற்பொழுது நண்ண என்பார் (திருஞானசம்பந்தர் 1236) ஆளுடைய பிள்ளையாரின் திருமண நிகழ்ச்சியை,

**"பிள்ளையாரது திருவடி விளக்கப்பெற்றது;**
**அவர், தூமலர்த் தவிசின்மேல் எழுந்தருளியிருந்தார்;**
**அதில் தூபம் சுற்றிலும் மணம் பரப்பியது;**
**மணியணி விதானம், மேலே விளங்கிற்று;**
**மடவார் வாழ்த்தொலி எழுப்பினர்; சூழ இருந்த**
**மறையோர் மறைமொழிகளால் ஏத்தினர்;**
**வெண்பொரியை வேள்வித் தீயிலிட்டு ஆகுதி செய்து**
**உரிய மந்திரம் பாவனைகளுடன்**
**இறைவனை ஏத்தும் சடங்கு நிகழ்ந்தது"**
**(திருஞானசம்பந்தர் 1231, 1322, 1237)**

என்று சேக்கிழார் விளக்குகின்றார்.

மணமகளது கழுத்தில் மணமகன் மங்கலநாண் பூட்டுவதும் மரபாயிருந்து வந்துள்ளது. மணச்சடங்குகளில் இதுவே மிக மிக இன்றியமையாதது. மங்கல நூல் மட்டுமே அணிதலும், மங்கல நாணுடன் தாலியையும் சேர்த்து அணிதல் உண்டு எனக் கருதலாம் (குங்குலியக்கலய நாயனார் 9). அம்பொன் மணி நூல் (திருநாவுக்கரசர் 34). என்று சேக்கிழார் இதனைக் குறிப்பர். திருநாண் பூட்டிய மணமகன், தன் துணைவியின் கையைப் பிடித்தல் மரபு. இதனைப் பாணிக் கிரகணம் (பாணி – கை; கிரகணம் – பற்றுதல்) என்று கூறுவதுண்டு (மானக்கஞ் சாற நாயனார் 20). மணம் முடிந்தபின் தாம்பூலம் முதலியன வழங்குவர் (தடுத்தாட் கொண்ட புராணம் 20). இரு வீட்டு உற வினர்களும் ஒருங்குகூடிப் புறப்படுவர். அக்கூட்டம் முன்பைவிடப் பெருகிக் காணப்படும் (மானக்கஞ்சாற நாயனார் 36).

இவ்வாறு, தெய்வச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில் அக்காலச் சமுதா யத்தில் நிகழ்ந்த திருமண முறைகள், திருமணச் சடங்கு முறைகள் போன்ற வற்றைப் பரக்கக் காணலாம்.

*நன்றி :*
*சேக்கிழார் மாநாட்டு மலர் 2005*

# சைவசமயப் பாதுகாப்பு

**மறைமலை அடிகள்**

காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர்! அகண்டாகாரசிவ
போகம்எனும் பேரின்பவெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்,
ஏகஉருவாய்க் கிடக்கு தையோ!
இன்புற்றிட நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச்
சேரவாரும்! செகத்தீரே!"

– தாயுமானசுவாமிகள்

"சைவசமயம்" என்பது 'சிவத்தை ஆராய்ந்து அறிந்த பொழுது அல்லது கொள்கை' என்ற பொருள்படும். இந்தக் கொள்கையைப் பாதுகாத்துக் கொள்ளு தலே சைவசமயப் பாதுகாப்பு ஆகும். உலகத்திலே அளவிறந்த கொள்கைகள் இருந்தாலும், அவையெல்லாவற்றுள்ளுங் கடவுளைப் பற்றிய கொள்கையே சமயம் என்று பெரும்பான்மையும் எல்லாராலுங் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. மக்கள் நிலையில்லாத வாழ்க்கை உடையவராய் இருத்தலாலும், நோயுந் துன்பமுங் கவலை யும் அடுத்தடுத்து வந்த அவரை வருத்துத லாலுந், தமக்குத் துணையாக நினைத்த மக்களுந் தம்மைப்போலவே நோய் முத லியவற்றால் வருந்தி நிலையின்றி மறைந்து போதலாலும், அவர்கள் தம்மினுந் தம்மைப் போன்ற எல்லா உயிர்களினும் மேற்பட்டு உயர்ந்த ஒரு பேரறிவுப் பொருளான கடவுளின் துணையை நாடினவராய் இருக் கின்றார்கள். கடவுள் இல்லையென்று வலியுறுத்திப் பேசிவந்தவர்களுங்கூடப் பெருந்துன்பங்கள் வந்து தம்மை மூடிக் கொண்ட காலத்தில் தாம் கொண்ட கொள்கையைப் பிசகென உணர்ந்து கடவுளை நம்பத் தலைப்பட்டிருக்கின் றார்கள். கடவுளிடத்தில் நம்பிக்கையில்லாத அருகரும் பௌத்தருங் கூடத் தமக்கு மேற்பட்ட துணையை நாடினவர்களாய்த் தம் சமய குரவரையே கடவுளாக எண்ணி வழிபட்டு வருகின்றனர். தம்மையே கடவு ளாக நினைப்பவர்களுங்கூடத் தமது கொள்கையை உண்மைப்படுத்திக் கொள்ள முடியாமை கண்டு ஏதாவதொன்றைத் தமக்கு மேற்பட்டதாக வைத்து வணங்கி வருகின்றார்கள். இங்ஙனமாக ஒன்றோ டொன்று மாறுபட்ட கொள்கைகள் உடைய வர்களெல்லாருங் கடைசியாகக் கைக் கொண்டது 'தமக்கு மேற்பட்ட ஒரு பேரறிவுப் பொருள் வணக்கமே' ஆகும். இம் முடிந்த கொள்கையில் எல்லாச் சமயிகளும் உடன்பாடு உடையவராய் இருக்கின்றனர்.

இனி, மக்கள் எல்லாரும் இங்ஙனம் தம்மின் மேற்பட்ட ஒரு பேரறிவுப் பொருளின் உதவியை விரும்பி நிற்றல் எதன் பொருட்டு என்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்குங்கால், அவர் தமது துன்பத்தை நீக்கிக் கொள்ளுதற்கும் இன்பத்தைப் பெறுதற்குமேயாம் என்னும் உண்மை புலனாகும். மக்கள் மட்டுமேயல்லர், மக்க ளினுந் தாழ்ந்த எல்லா உயிர்களுங்கூடத் தமது துன்பத்தைப் போக்கி இன்பத்தை ஆக்கிக்கொள்ளவே முயன்று நிற்கின்றன. இங்ஙனம் நம் கண்ணெதிரே காணப்படு கின்ற இவ்வுண்மையைக் கொண்டு, எல்லா உயிர்களும் இப்போது துன்பக் கயிற்றாற் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும், இத்துன்பக் கயிற்றை அறுக்கவும் இன்ப வெள்ளத்தைப் பெருக்கவுந் தம்மால்

ஆகாமையின், துன்பத்தினின்றுந் தம்மை விடுவித்து இன்பத்தை ஊட்ட வல்ல முழுமுதற் கடவுளின் உதவியைப் பெறுதற்கு அவை பெரிதும் விரும்பி நிற்கின்றனவென்றும் நாம் தெளிவாக அறிந்து கொள்கின்றனம் அல்லமோ? இன்னும், பிறப்பு இறப்பு நோய் மூப்புக் கவலை, இழப்பு முதலான பல திறப்பட்ட வடிவங்களிற் றோன்றுந் துன்பங்கள் அத்தனையும் எல்லா உயிர் களையும் வருத்திவரக் காண்கின்றோமாத லால், இன் துன்பங்கள் உடையோர் வேறு வகையில் எவ்வளவு உயர்ந்தோராயினும் உயிர்களேயல்லாமற் கடவுளாக மாட்டார். இவ்வுயிர்களை இத் துன்பத்தினின்றும் மீட்டு இவற்றிற்கு இன்பத்தைத் தருங் கடவுள் ஒருவரே எவ்வகைத் துன்பமும் இல்லாதவர்; எல்லா இன்பமும் ஒருங்கே உடையவர். இதுவே கடவுளுக்கு உண்மை யான தன்மையென்பதை எல்லாச் சமயி களும் உடன்பட்டு உரைப்பார்களாயினுஞ், சைவசமயத்தில் மட்டும் அவ்வுண்மை முன்னுக்குப் பின் மாறில்லாமற் காணப்படு கின்றது; மற்றைச் சமயத்தவர்களோ பிறப்பு இறப்பு முதலான மேற்கூறிய துன்பங்களிற் கிடந்து உழன்றவர்களை, அவரவரிடத் திலுள்ள சிற்சில சிறந்த தன்மைகளைக் கண்டும் வலிய செய்கைகளைக் கண்டும் முழு முதற் கடவுளாகத் துணிந்து வணங்கி வருகின்றனர். நாடக அரங்கத்தில் அரச கோலந் தாங்கிவந்து ஆடுவோன் உண்மை யில் அரசன் ஆகாமைபோல, இறைவனரு ளாற் சிற்சில உயர் நலச் செய்கைகளைப் பெற்றவர்கள் அவற்றால் அவ்விறைவனைப் போற் கருதப்படினும் அவர் உண்மையில் அவ்விறைவனாக மாட்டார். சைவசமயிகள் வணங்கிவருவது, இன்பவடிவமான கட வுளேயல்லாமற் பிற உயிரக்ளுள் ஒன்றும் அன்றென்பதற்கு அடையாளம் என்னென் றால், அன்பு அல்லது இன்பம் என்று பொருள்படுஞ் சிவம் என்னுஞ் சொல்லையே முழுமுதற் கடவுளுக்குச் சிறப்புப் பெயராக வைத்து வழங்குவதும், அச் சிவத்திற்குப் பிறப்பு இறப்பு முதலான எவ்வகைத் துன்பமுஞ் சிவபுராணங்களிற் காணப்படா மையுமே யாம். இவ்வுண்மையை வலி யுறுத்தும் பொருட்டே,

**"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி**
**– யாங்கே**
**மாதொரு பாகனார் தாம் வருவர்; மற்று அத் தெய்வங்கள்,**
**வேதனைப்படும் இறக்கும் பிறக்கும் மேல்வினையுஞ்**
**–செய்யும்;**
**ஆதலால் இவையிலாதான் அறிந்தருள் செய்வனன்றே"**

என்பது சிவஞானசித்தியாரிலும் அருளிச் செய்யப்பட்டது.

இங்ஙனம், இன்பவடிவாக விளங்கும் முதல்வனையே வணங்குஞ் சைவசமயிகள் எவ்வுயிர்க்கும் இன்பத்தையே செய்யக் கடமைப்பட்டவர்களாயிருத்தலால், இன்பத் திற்கு மாறான துன்பத்தைத் தருங்கொலைத் தொழிலை எவ்வுயிர்களிடத்துஞ் செய்யா தவர்களாயும், அக்கொலைத் தொழிலால் வரும் ஊனைத் தின்னாதவர்களாயுஞ் சீவகாருணிய ஒழுக்கத்தில் தலைசிறந்து நிற்கின்றார்கள். சீவகாருணிய ஒழுக்கம் மற்றைச் சமயத்தவராலுங் கைக்கொள்ளப் படினும், அது சைவசமயிகளுக்கே பழமைக் காலந்தொட்டுச் சிறந்த உரிமையாகி வருகின்றது. மற்றைச் சமயத்தவருந் தம்மிற் புலால் தின்னாத ஒருவரைப் பார்த்து, 'அவர் சைவராகிவிட்டார்' என்று சைவப்பெயராற் கூறுதலிற், சீவகாருணிய வொழுக்கஞ் சைவசமயிகளுக்கே சிறப்புரிமைப் பொரு ளாய் விளங்குகின்றது.

இனி, இங்ஙனமெல்லாம் பலவகை யாலும் உயர்ந்த சைவசமயத்தைப் பாது காத்துக் கொள்ளும் வழிகள் என்னென் றாற், சைவசமயத்திற் பிறக்கும் பெருந் தவம் பெற்றவர்கள் முதலில் தம்மால் வணங்கப்பட்டுவரும் முழுமுதற் கடவு ளான சிவத்தின் இயல்புகளை அறிந்தோ ரிடத்தும் நூல்களிடத்துங் கேட்டும் பயின்றும் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். பெண்பாலாரே பிள்ளைகளின் நல்லறிவு வளர்ச்சிக்கும் நல்லொழுக்கத் திற்குங் காரணராக இருத்தலாற், பெண் மக்களுக்குச் சைவசமய நூல்களையும் நல்லொழுக்கங்களையும் அறிந்தோர் வாயிலாகக் கற்பித்து வருதல் வேண்டும். ஆண் பிள்ளைகள் மற்றக் கல்வியொடு சைவசமய உணர்ச்சியும் பெற்றுவரும்படி கல்விச்சாலைகள் ஆங்காங்குத் திறப் பித்து, அதனைச் செவ்வையாகப் புகட்டி வருதல் வேண்டும். தேவார திருவாசகங் களுக்குப் பொருள் தெரிந்து கொள்வ தோடு, இனிய குரலில் அவற்றை இசை யுடன் ஓதுதற்கும் ஒவ்வொருவரும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, ஓர் உயிரைக் கொலை செய் யாமையுங், கொன்று அதன் ஊனைத் தின்னாமையுஞ் சைவ சமயத்திற்குச் சிறந்த அறமாயிருத்தலால், எல்லாருஞ் சீவகாருணிய வொழுக்கத்தைக் கைப்பற்றி யொழுகும்படி எவ்வெவ் வகையால் முயற்சி செய்தல் வேண்டுமோ அவ்வவ் வகையாலெல்லாஞ் செய்து அதனை எங்கும் பரவச் செய்தல் சைவர்க்கு இன்றி யமையாத கடமையாயிருக்கின்றது.

இனித், தமிழ்மொழியின் அமைப்பும் அதன் இயற்கையுஞ் சைவசமய உண்மை யோடு மிகவும் ஒன்றுபட்டிருத்தலால், அதனை எல்லாரும் நன்றாகக் கற்று வேறு மொழிக் கலப்பில்லாமற் செவ்வை யாகப் பேசவும் எழுதவும் அதிற் புதிய புதிய நூல்கள் இயற்றவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும். தமிழ் அல்லாத மற்ற மொழி களில், வருத்தப்பட்டுச் சொல்லுஞ் சொற் களுஞ், சினந்துன்பம் வந்தாற் பிறக்கும் உரத்த ஓசைகளும், இளைத்த ஒலிகளும் நிரம்பிக் கிடத்தலால் அவையெல்லாஞ் செயற்கை மொழிகளென்றுந், தமிழில் வருத்தமின்றி இயல்பாற் பிறக்குஞ் சொற்களே நிறைந்து சினத்தாற் பிறக்கும் வெடுவெடுப்போசையுந் துன்பத்தாற் பிறக்கும் இளைப்பொலியும் இன்றி, எல்லாம் இனிய குணத்திற் பிறக்கும் மெல்லோசைகளாய் இருத்தலின், தமிழ் இன்பவடிவாய் விளக்குஞ் சிவத்தோடு ஒத்த இன்பம் வாய்ந்த தெய்வ மொழி யாம் என்றுஞ் சைவ சமயிகள் இவ்வுண்மை யைக் கருத்திற் பதியவைத்து அதனை வளரச் செய்தற்கான எல்லா முயற்சி களையுங் குறைவரச் செய்தல் வேண்டும்.

நம் செந்தமிழ் மக்களில் நூறாயிரம் பேர்க்கு இரண்டு மூன்று பேரே சிறிது கற்ற வர்களாயிருக்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாருஞ் கல்வியறிவு இல்லாதவர் களாயும், அறியாமைச் சேற்றிற் புதைந்து கிடப்பவர்களாயும் இருக்கின்றார்கள். உலகத்தில் இவ்விந்திய நாட்டைசத் தவிர மற்றைப் பெரும் பாகங்களில் இருப்பவர் களெல்லாருஞ் கல்வியிலும் மெய்யுணர் விலும் உழவிலுங் கைத்தொழிலிலும் வாணிகத்திலும் நாளுக்கு நாள் மேம்பட்டு வர நமது நாட்டிலுள்ளவர்களோ – அவர் களிலுந் தமிழர்கள் இவற்றில் மிகவுந் தாழ்ந்த நிலைமையிலிருக்கின்றார்கள்!

இவர்களை இனிக் கல்விச்சாலைகளுக்கு அனுப்பிக் கல்வி கற்பித்தல் இயலாதாகலின், ஊர்கள் தோறும் நகரங்கள் தோறுங் கழகங்கள் வைப்பித்து அவற்றின் வாயிலாகத் தமிழும் சைவமும் உணர்ந்த அறிஞரைப் பல இடங்கட்கும் அனுப்பி, தமிழ் நூற்பொருள்களையுஞ் சைவ நூற்பொருள்களையும் விளக்கமாக அறிவுறுத்தி வருதல் இப்போது உடனே செயற்பாலதான நன்முயற்சியாகும். தமிழ் கற்றோர் தொகை மிகவுஞ் சுருங்கிப் போனதால், 'தமிழ் அறிஞர்க்குப் பொருள் ஏன் வேண்டும்?' என்று ஏளனமாய் உரையாமல், அவர்க்கு ஏராளமாய்ப் பொருளுதவி செய்து, கல்வியில் எல்லையின்றிக் கற்று அதனைப் பிறர்க்கும் பயன் படுத்தும்படி அவருக்கு மனக்கிளர்ச்சியினை விளைவித்தல் வேண்டும்.

இனிச் சிவபிரான் கோயில்களில் நிறுத்தப்பட்டிருக்கும் திருவுருவங்கள், இறைவனுக்கு என்றும் உரிய அருளுருவத்தையும், அன்பர்க்கு அருள் செய்யும் பொருட்டு முதல்வன் ஓரொருகாற் கொண்ட திருவுருவத் தோற்றங்களையும் அன்பர்க்கு நினைவில் எழுப்புதற் பொருட்டு அமைத்த வடிவங்களேயாகும். இவ்வடிவங்களை வணங்கச் செல்லும் அன்பர்கள் இவற்றைக் கண்டவுடன் ஐயன் அருள் உருவங்களை நினைந்தவராகி அகங்குழைந்து உருகுவர். ஆண்டவனதருளுருவத்திற்குச் செய்யும் எண்ணத்துடன் தம் அன்பினாற் பூவும் நீரும் இட்டு ஆடையணிகலன்கள் சாத்தி அவ்வடிவங்களை வணங்குதலும் அவ்வன்பிற்கு அடையாளமாகும். இறைவனருளைப் பெறுதற்கு மெய்யுணர்வும் அதன் வழித்தோன்றும் பேரன்புமே வாயில்களாதலாலும், இக்காலத்தில் மக்களிற் பல்வகைக் கூட்டத்தாரும் அறிவைப் பெருகச் செய்து, அறிவாலும் அன்பாலும் ஆண்டவனை அடைதற்கு மிக முயன்றுவருதலாலுஞ் சைவ சமயிகளான அறிஞரும் அறிவு நெறியிற்றமது கருத்தை மிகுதியாய்ச் செல்லவிடுதல் வேண்டுமேயல்லாமல், வெறுந் தொழில் நெறியிற் புகுந்து ஒப்பனைகளின் பொருட்டுந் திருவிழாக்களின் பொருட்டும் ஆயிரக் கணக்காகவும் நூறாயிரக் கணக்காவும் போட்டி போட்டுக் கொண்டு பொருள்களைச் செலவழித்துச் செருக்கடையலாகாது. எல்லா உலகங்களையும் எல்லாப் பொருட்களையும் உடைய பெருஞ்செல்வரான நம் ஆண்டவனுக்கு, ஏழை மக்கள் நல்ல அல்லா வழிகளில் ஈட்டிய பொருளைத் திரள்திரளாகக் கொடுத்தாலும், அவன் அதனைக் கண்டு ஏமாறித் தனது அருளைக் கொடுத்துவிடுவான் அல்லன். நம் ஐயனுக்கு வேண்டுவன அன்பும் அன்பொழுக்கமுமேயாகும். அதுபற்றியன்றே திருநாவுக்கரசு நாய னாரும்,

**"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்**
**பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு**
**நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே"**

என்று அருளிச் செய்தனர்.

ஆதலால், திருக்கோயில்களுக்குச் செய்யுஞ் செலவை இயன்றமட்டுஞ் சிறுகவே செய்து, மிச்சப் பெரும்பொருளை சிவவறிவு வளர்ச்சிக்குஞ், சிவனடியார்கட்கும், பழுதுபட்ட கோயில்கள் சாவடிகள் குளங்கள், சோலைகள் பாட்டைகள் முதலியவற்றின் திருப்பணிகட்குஞ் செலவு செய்து சைவர்கள் எல்லாருஞ் சிவபெருமான் திருவருளைப் பெறுவார்களாக!

# சங்கநிதி பதுமநிதி

மயிலை சீனி வேங்கடசாமி

மனிதரின் நல்வாழ்வுக்கு இன்றியமை யாமல் வேண்டப்படுவது அறம், பொருள், இன்பம், வீடு என்பவை. இவை நான்கும் புருஷார்த்தம் என்று கூறப்படுகின்றன. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றும் இம்மைக்கு – இவ்வுலக வாழ்க்கைக்கு உரியவை. வீடு என்பது மறுமைக்கு உரியது. இம்மை வாழ்க்கைக்கு உரிய அறம், பொருள், இன்பம் என்பவற்றில் முக்கியமானது பொருள். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை. பொருட் செல்வம் உள்ளவர் இவ்வுலகத்தில் சிறந்த வாழ்க்கை வாழ்கி றார்கள். ஆனால், பொருள் எல்லோரிடத் திலும் ஒரே அளவாக இருப்பதில்லை. பெரும் செல்வம் உள்ளவர் இலட்சாதி பதிகள் என்று கூறப்படுகின்றனர். பல இலட்சம் பொருளுள்ளவர் கோடீசுவரர் என்று கூறப்படுகின்றனர். நவகோடி நாராய ணர்களைப் பற்றிக் கதைகளில் படித் திருக்கிறோம். உலகத்திலே உண்மை யிலேயே பல கோடீசுவரர்கள் இருக்கி றார்கள். நமது தமிழ்நாட்டிலும் கோடீசு வரர்கள் சிலர் இருக்கிறார்கள்.

பாரதநாட்டுக் காவியப் புலவர்கள் செல்வத்தைப் பற்றிக் கற்பனை செய்தி ருக்கிறார்கள். கோடி, கோடி, கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி கோடி என்று கற்பனை செய்துகொண்டே போகிறார்கள். இப்படிக் கோடி கோடி யாகக் கற்பனை செய்து கொண்டே போனால் இதைப் படிப்பவர் விளங்கிக் கொள்வது அருமை. ஆகவே இந்தக் கணக்குகளை விளங்கிக் கொள்வதற்குக் குறியீடுகளையும் பெயர்களையும் கொடுத் திருக்கிறார்கள்.

இவற்றில் இரண்டு எண்களை மட்டும் இங்கு ஆராய்வோம். அவை சங்கம், பதுமம் என்னும் இரண்டு எண்கள்.

கோடி X கோடி கொண்ட எண்ணுக்குச் சங்கம் என்பது பெயர். அதாவது கோடி, பத்துக்கோடி, நூறு கோடி, ஆயிரங்கோடி, இலட்ச கோடி, பத்து லட்சகோடி, சங்கம். இதை எண்ணால் எழுதும் போது ஒன்றுடன் பதினான்கு சுன்னம் சேர்த்து எழுத வேண்டும்; 100000000000000. இவ்வளவு எண்ணிக்கையுள்ள செல்வத்துக்குச் சங்கநிதி என்பது பெயர். இதற்குச் சங்கின் உருவத்தை எழுதிக் காட்டுவார்கள்.

தக்கயாகப் பரணி என்னும் நூலிலே, காளிக்குக் கூளி கூறியது என்னும் பகுதி யில் "கொண்டகோடி" என்று தொடங்கும் தாழிசையின் உரையில், உரைகாரர் இதனை நன்றாக விளக்கிக் கூறுகிறார். அவ்வுரை காரர் எழுதுவது வருமாறு : "கொண்ட கோடி" என்றது ஒரு கோடி ஒன்றாகக் கொண்டு எண்ணப்பட்ட ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், நூறாயிரம், பத்து நூறாயிரம், கோடி என்றவாறு.

கோடி X கோடி X கோடி X கோடி X கோடி கொண்ட எண்ணுக்குப் பதுமம் என்பது பெயர். இந்த எண் முப்பத்தாறு இடங்களைக் கொண்டது. இதை எண்ணால் எழுத வேண்டுமானால் ஒன்றுடன் முப்பத் தைந்து சுன்னம் சேர்த்து எழுத வேண்டும் 100000000000000000000000000000000000 இவ்வளவு எண்ணிக்கையுள்ள செல்வத் துக்குப் பதுமநிதி என்று பெயர் கூறு வார்கள். இதற்குத் தாமரைப் பூவின் உருவத்தை அமைத்துக் காட்டுவார்கள்.

சங்கநிதி, பதுநிதிகளைப் பற்றிப் புரா ணங்களிலும் காவியங்களிலும் காணலாம். சக்கரவர்த்திகள் உலகத்திலே எப்பொழுதோ ஒருமுறை அரிதாகத் தோன்றுகிறார்கள் என் பதும் அவர்கள் சக்கரச் செல்வம் படைத்த வர்கள் என்பதும் அவர் களிடத்திலே சங்க நிதிகள் பதுமநிதிகள் இருந்தன என்பதும் காவியப் புலவர்களின் கற்பனை.

திவிட்டன் என்னும் சக்கரவர்த்தியிடம் சங்கநிதி பதுமநிதிகளும் இருந்தன என்று சூளாமணி காவியம் கூறுகிறது.

**"சென்றுயர் வலம்புரி செம்பொற்றாமரை**
**என்றியல் பெயரின இரண்டு மாநிதி**
**ஒன்றல மணிகளும் ஒண்பொருள் மாழையும்**
**நின்றிவை சொரிந்தொளி நிதற்றுகின்றவே"**

*(சூளாமணி – அரசியல், 373)*

**"தேவர்கள் திசைமுகங் காப்ப மாநிதி ஓவல**
**இரண்டு நின்று ஒருங்குவீழ்தர**
**மேவிய அருங்கலம் விளங்க நோக்கிய**
**காவலன் செல்வநீர்க் கடலுள் மூழ்கினான்"**

(சூளாமணி – அரசியல், 423)

**"தேங்கமழ் தெய்வச் செம்பொற்றாமரை சுரிவெண் சங்கம்**
**நீங்கியவை நெறிகளாக ஏழாதனங்கள் எய்தி**
**ஆங்கமர் செல்வந் தம்மால் அற்றைக் கன்றமர்ந்த மாதோ**
**ஓங்கினன் உருவத்தாலும் வில்ஒன்ப துயர்ந்த தோளான்"**

(சூளாமணி – சுயம்வரம் 4)

இவ்வாறு சங்கநிதி பதுமநிதிகளைக் கற்பனை செய்த காவியப் புலவர்கள் அம்மட்டும் நின்றுவிடவில்லை. இந்த நிதிகள் உயிரற்ற வெறும் சடப்பொருள்கள் தானே. இந்த நிதிகளுக்கு அதிபதியாகத் தெய்வங்களைக் கற்பித்தார்கள். சங்க நிதிக்கும் பதுமநிதிக்கும் தலைவர்களாக இரண்டு பூதங்களை (தெய்வங்களைக் கற்பித்தார்கள். அந்தப் பூதங்களைக் குறள் உருவமாகவும் குடம் போன்ற வயிறும் குறுகிய கைகால்களும் உடையன வாகவும் கற்பித்தனர். மேலும் இரண்டு நிதிகளுக்கும் பெருந்தலைவனாக குபேரன் என்னும் தெய்வத்தையும் கற்பித்தார்கள். குபேரன் என்றால் அழகில்லாதவன் என்பது பொருள். பேரம் என்றால் உருவம் என்பது பொருள். குபேரன் என்றால் விகாரமான உருவமுடையவன் என்பது பொருள். குபேரனை நிதியின் கிழவன் என்றும் வைசிரவணன் என்றும் கூறு வார்கள். பௌத்த மதத்தார் குபேரனை ஜம்பாலி என்று கூறுவர், ஜம்பாலியின் கையில் கீரிப்பிள்ளையின் தோலினால் செய்யப்பட்ட பணப்பை உண்டு.

நிதியின் கிழவனைக் குள்ளமாகவும் குறுகின கைகால்களையுடைவனாகவும் கற்பித்துக் குபேரனாக்கிய புலவர்கள், அவன் விரும்பும் இடங்களுக்கு அவனைத் தூக்கிச் செல்ல ஒரு இயக்கனை ஊர்தி யாகக் கற்பித்தார்கள். அந்த இயக்கனுடைய பெயர் நரன் என்பது. ஆகவே குபேரனுக்கு நரவாகனன் என்னும் பெயரும் உண்டு. குபேரன் திக்கு பாலகர்களில் ஒருவன்.

**"இருநிதிக் கிழவன் இயக்கர் வேந்தன்**
**வடதிசைத் தலைவன் நரவாகனனே"**

என்று பிங்கல நிகண்டு குபேரனைக் கூறுகிறது.

குபேரனுடைய நிதிகளுக்கு அளவில்லை. அவனுடைய நிதிகள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றனவாம். நெல் வயலில் ஆண்டு தோறும் நெல் விளைவது போல, குபேரனுடைய தோட்டத்தில் சங்கநிதியும் பதுமநிதியும் விளைகிற கொடிகள் உள்ளனவாம்! சங்கும் தாமரையும் நீரில் விளையும் பொருள்கள் அல்லவா? குபேரனுடைய தோட்டத்துக் குளங்களில் சங்க நிதிகளும் பதும (தாமரை) நிதிகளும் வளர்ந்து கொண்டே இருக்கின்றனவாம்! (இச் செய்தியைத் தக்கயாகப் பரணி (காளிக்குக் கூளி 195) கூறுகிறது.

நிதியின் கிழவனான குபேரன் சிவபெருமானின் தோழன் என்று திருநாவுக்கரசர் கூறுகிறார் :

**"நதியாருஞ் சடையானை நல்லூரானை**
**நள்ளாற்றின் மேயானை நல்லத்தானை**
**மதுவாரும் பொழில் புடைசூழ் வாய்மூரானை**
**மறைக்காடு மேயானை யாக்கூரானை**
**நிதியாளன் தோழனை நீடூரானை**
**நெய்த்தானம் மேயானை யாரூ ரென்றும்**
**பதியானைப் பள்ளியின்முக் கூடலானைப்**
**பயிலாதே பாழே நான் உழன்ற வாறே".**

**(திருப்பள்ளியின் முக்கூடல் – திருத்தாண்டகம் 7)**

**"முத்தனைய முகிழ் முறுவலுடையாயர் போலும்**
**மொய்பவளக் கொடியனைய சடையார் போலும்**
**எத்தனையும் பத்தி செய்வார்க் கினியர் போலும்**
**இருநான்கு மூர்த்திகளும் மானார் போலும்**
**மித்திர வச்சிரவணற்கு விருப்பர் போலும்**
**வியன் வீழி மிழலையமர் விகிர்தர் போலும்**
**அத்தனொடு மம்மையெனக் கானார் போலும்**
**அடியேனை யாளுடைய அடிகள் தாமே"**

(திருவீழிமிழலை திருத்தாண்டகம் 9)

சில சிவன்கோவில்களில் குபேரனுக்கும் கோயில் அமைக்கப்பட்டுள்ளன. கீழ் வேளூர்க் கோயில் கட்டுமலைமேல் உள்ள கோயில். இது திருவாரூருக்குக் கிழக்கே ஏழு மைல் தூரத்தில் உள்ள இருப்புப் பாதை நிலையத்துக்கு அருகில் உள்ளது. இக்கோயிலில் குபேரனுக்கு ஒரு கோயிலும் குபேரனுடைய உருவமும் இருக்கின்றன.

திருநாகேச்சரக் கோயிலிலும் சங்கநிதி பதுமநிதி உருவங்கள் உள்ளன. திருநாகேச்சரக் கோயில் திருவிடை மருதூர் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து இரண்டரை மைல் தூரத்தில் உள்ளது.

வேறு பல பழைய சிவன் கோயில்களில் கோபுரவாயில் முதலான வாயில்களின் இரு புறங்களிலும் சங்கநிதி பதுமநிதி உருவங்களைக் காணலாம். இதன் கருத்து என்ன? ஏன் சங்கநிதி பதுமநிதிகளின் உருவங்கள் கோயில் வாயில்களில் அமைக்கப்பட்டுள்ளன? சங்கநிதிபதுமநிதி முதலான பெரிய செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அந்தச் செல்வங்கள் கடவுளின் திருவருட் செல்வத்துக்கு (கருணாநிதிக்கு) இணையாகா என்பதைக் கோயிலுக்கு வருபவர்களுக்கு நினைவூட்டுவதற்காகவே இவை அங்கு அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் கோயிலுக்குச் செல்பவரில் ஒருசிலராவது இந்தப் பதுமநிதி சங்கநிதி உருவங்களைக் கண்டு அவற்றின் கருத்தை உணர்கிறார்களா? ஆயிரத்தில் ஒருவர்கூட இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். இராமலிங்க

வள்ளலாரும், சங்கநிதி, பதுமநிதிகளை வேண்டாமல், 'நின்கருணை நிதி வேண்டும்' என்று கடவுளின் திருவருள் நிதியைத் தானே வேண்டினார்!

இறைவனுடைய அருட்செல்வமாகிய கருணாநிதியை மிக நிறையப் பெற்றவர் திருநாவுக்கரசப் பெருமான் அவர், திருக் கோயில்களில் உழவாரத் திருப்பணி செய்வது வழக்கம். ஒரு சமயம் பூம்புகலூர் திருக்கோயிலில் சுற்றுப் பிரகாரத்தில் இருந்த புல்லையும் கல்லையும் உழவாரப் படையினால் களைந்து செப்பனிட்டுக் கொண்டிருந்தபோது பருக்கைக் கற்க ளுடன் செம்பொன்னும் நவமணிகளும் வெளிப்பட்டன. கடவுளின் திருவரு ளாகிய கிடைத்தற்கரிய பெருநிதியைப் பெற்றிருந்த அவருக்கு இந்த நிதிகள் பருக்கைக் கற்களும் கூழாங்கற்களும் போலத் தோன்றின. அவர் அவற்றைக் கையினால் தொடாமல் உழவாக்கத்தி னால் எடுத்து அருகிலிருந்த குளத்தில் வீசி எறிந்தார்.

"செம்பொன்னும் நவமணியும்
சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர் பிரான் திருமுன்றில்
உருள்பருக்கையுடன் ஒக்க
எம்பெருமான் வாகீசர்
உழவாரத்தினில் ஏந்தி
வம்பலர் வெண்பூங்கமல
வாவியிற் புக எறிந்தார்"

(திருநாவுக்கரசர் புராணம் – 417)

சங்கநிதி பதுமநிதி போன்ற பெருஞ் செல்வங்களைப் பெற்றிருந்தாலும் அவர் கடவுளின் திருவருட் செல்வத்தைப் பெறாத வர்களானால் அவர்களுக்கு மன நிறைவு நிறைமனம் – உண்டா? இல்லையே. ஆகவே, கடவுளின் திருவருட் செல்வத்தைப் பெற்றவர், பெருநிதிகளைப் பெறாதவராக இருந்தாலும் அவர்களே செல்வராவர். கடவுளின் திருவருட் செல்வத்தைக் குறை வறப் பெற்ற அருட்பெருஞ் செல்வராகிய திருநாவுக்கரசர் இது பற்றி அருளிச்செய்த சங்கநிதி பதுமநிதிச் செய்யுளைக் கூறி அமர்வோம்.

"சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார்சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே".

## திருவாசகம்

**பூங் கமலத்து அயனொடு மால் அறியாத நெறியானே,**
**கோங்கு அலர் சேர் குவி முலையாள் கூறா, வெண் நீறு ஆடீ,**
**ஓங்கு எயில் சூழ் திருவாரூர் உடையானே, அடியேன் நின்**
**பூங் கழல்கள் அவை அல்லாது, எவை யாரும் புகழேனே!**

# திருகோணமலை ஈன்றெடுத்த முதல் பெண் துறவி சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி மாதாஜி அவர்கள்

**பொ. கந்தையா**
*காந்தி ஆசிரியர்*

சிவபூமி தட்சிண கைலாசம் பாடல் பெற்ற தலம் என்றெல்லாம் புகழப்படும் திருகோணமலையில் அவ்வப்போது மகான்களும் அறிவாளிகளும் தோற்றித் தொண்டுகள் செய்துள்ளார்கள். சைவப் பண்பாட்டுக் குடும்பத்தில் 1907ம் ஆண்டு மாசி மாதம் 8ம் திகதி பிறந்தார். தகப்பன் பெயர் நாகரத்தினம்பிள்ளை, தாய் பெயர் தங்கம்மாள், பிள்ளைத் திருநாமம் செல்வநாயகி.

தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்றுத் தேர்ந்து ஆசிரியையாகப் பல காலம் பணி புரிந்தார். சமய அறிவைப் பெறுவதற்காகச் சமஸ்கிருதமும் கற்றார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பொழிவுகளை ஆற்றுவார்.

பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் வாழ்க்கையில் திருப்தி அளிக்கவில்லை. எனவே அருட்செல்வத்தைத் தேடினார். யாத்திரைகள் செய்தார், குருவைத் தேடினார். ரிஷி கேசத்தில் சிவானந்த ஆச்சிரமத்தை அமைத்து உலகம் முழுவதும் இந்துமதத்தைப் பரப்பும் மகாரிஷி சுவாமி சிவானந்தரின் பாதங்களைச் சரணடைந்தார்.

சுவாமி சிவானந்தா செல்வநாயகி அம்மாவுக்கு சந்நியாசம் கொடுத்து சுவாமி சிவானந்த சச்சிதானந்த சரஸ்வதி என நாமமிட்டு ஆசீர்வதித்து இறைபணிக்கு ஆளாக்கிவிட்டார். திகதி 1952 கார்த்திகை7.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்ற பாரதி பாட்டுக்கமைய திருகோண மலையில் இறைபணியைத் தொடங்கி னார். மாதாஜீக்கு உதவியாக ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களையும் சுவாமி சிவானந்தா இலங்கைக்கு அனுப்பிவைத்தார்.

மாதாஜி செல்வந்தக் குடும்பத்தில் பிறந்ததால் காணி பூமிகள், வயல்கள் ஏராளம். ஒரு பகுதிச் சொத்துக்களை விற்று உப்புவெளியில் பெரிய காணியில் பல கட்டிடங்களைக் கட்டி திவ்ய ஜீவன சங்கத்தையும், சிவானந்த தபோவனத்தை யும் 1953இல் ஸ்தாபித்து சுவாமி சச்சி தானந்தரின் உதவியுடன் சமய சமூகத் தொண்டுகளை பெருமளவில் நடத்தினார்.

இருளில் இருக்கும் பிள்ளைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துவிட்டார். மாணவர் இல்லத்துக்கு ஆண், பெண் பிள்ளைகளைச் சேர்த்து இல்லத்தைச் சிறப்பாக நடத்தினார்கள். மாணவர் களுக்குப் பாடசாலைக் கல்வியுடன் பல கைத்தொழில்களையும் பழக்கினார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலும் திவ்ய ஜீவன சங்கக் கிளைகளை நிறுவி சமய சமூகத் தொண்டுகளைச் செய் தார்கள். சமய சமூக வளர்ச்சிக்கான

துண்டுப் பிரசுரங்கள் வெளியீடுகளைச் செய்தார்கள், குருபூஜைகள், சமய விழாக்கள் நடைபெற்றன. எல்லாச் சமய குருமார்களையும் போற்றி வழிபடும் குருபூர்ணிமா தினம் விமரிசையாகக் கொண்டாடப்படும். அன்னதானமும் நடைபெறும். வெள்ளி விழாவும் நடந்து மலரும் 1978 மாசி 17இல் வெளியிடப் பட்டது.

மாதாஜி பல யாத்திரைகளை மேற் கொண்டார்கள். கைலாசமும் போய் வந்தார்கள். சுவாமி இராமதாஸ் அன்னை கிருஷ்ணாபாய் சுவாமி சுத்தானந்த பாரதியார் சுவாமி பிரேமானந்தா, சுவாமி சிதானந்த (ரிஷிகேசம்), சித்திரமுத்து அடிகளார் (மதுரை) ஆகியோர் வந்து ஆசி கூறினார்கள்.

மாதாஜி சுகவீனமுற்றபோது தபோவன நிர்வாகத்துக்குப் பொறுப்பாக நாகரத் தினம்பிள்ளை தங்கம்மாள் அறக்கட்டளை ஒன்றை எழுதி வைத்துள்ளார். அந்த ஒழுங்கின்படியே தபோவன நிர்வாகம் நடைபெற்று வருகிறது.

சுகவீனத்தைத் தொடர்ந்து 1978 சித்திரை முதலாந் திகதி மாதாஜீ சமாதி அடைந்தார்கள். தபோவனக் காணிக் குள்ளேயே மாதாஜியின் உடல் கிரியை கள் நடைபெற்று சமாதி வைக்கப்பட்டது. சமாதிக்கு பூஜை வழிபாடுகள் நடந்து வருகின்றன.

மாதாஜீ பலவகையிலும் சமூகத்துக்குத் தொண்டுகள் செய்துள்ளார்கள். பல பிள்ளைகள் படிப்பதற்கு உதவினார்கள். சிவானந்த தபோவனம் மாணவர் இல்லத்தில் ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளுமாக சுமார் நூறு பிள்ளைகள் கல்வி கற்று வருகிறார்கள்.

மாதாஜீ அவர்களின் ஆத்மா சாந்தி அடையவும் மக்கள் எல்லோரும் சீரும் சிறப்பும் பெற்று இன்பமாய் வாழவும் பிரார்த்திக்கிறேன்.

## திருவாசகம்

**பிணி எலாம் வரினும், அஞ்சேன்;**
**பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்;**
**துணி நிலா அணியினான் தன்**
**தொழும்பரோடு அழுந்தி, அம்மால்,**
**திணி நிலம் பிறந்தும் காணாச்**
**சேவடி பரவி, வெண் நீறு**
**அணிகிலாதவரைக் கண்டால்**
**அம்ம! நாம் அஞ்சுமாறே!**

# பசியும் ஆசையும்

**திருமதி. வளர்மதி சுமாதரன்**
***ஆசிரியை***
*கொ/ சைவமங்கையர் வித்தியாலயம்.*

**மானங்குலங் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவ முயற்சி தாளாண்மை – தேனின்**
**கசி வந்த சொல்லியர் மேற் காமுறுதல் – பத்தும்**
**பசி வந்திடப் பறந்து போம்.**

என்றாள் ஔவை மூதாட்டி. உலகின் எல்லா ஜீவராசிகளினதும் அடிப்படைத் தேவைகளில் உணவே முதன்மையானது. பசியற்றவர்கள் என யாரும் இருக்க முடியாது. கொடியவற்றுள் எல்லாம் கொடியது பசியே.

ஞானிகள் உலகில் உயிர்கள் படும் எல்லாத் துன்பங்களுக்கும் மூல காரணம் என்ன என்று ஆராய்ந்தார்கள். சகல துன்பங்களுக்கும் காரணம் ஆசையே என்று கண்டார்கள். எனவேதான் ஆசையை விட்டொழியுங்கள் என்று கூறினார்கள், உபதேசித்தார்கள்.

**ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்**
**ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்**
**ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள்**
**ஆசை விட விட ஆனந்தமாமே**

என்கிறது திருமந்திரம்.

பௌத்த மதக் கொள்கையையும், குறிக்கோளையும் இரண்டே இரண்டு வரிகளில் அடக்கிக் காட்டிய பெருமை மணிமேகலை என்னும் காப்பியத்தை ஆக்கிய சீத்தலைச் சாத்தனாருக்கு உண்டு.

**துன்பம் தோற்றப் பற்றே காரணம்**
**இன்பம் வீடே பற்றிலி காரணம்.**

என்பது அவர் வாக்கு.

ஆசைதான் சகல துன்பங்களுக்கும் மூலகாரணம் என்றாலும் அதைவிட அடிப்படையான காரணமும் ஒன்று உண்டு. அதுதான் பசிக்கொடுமை.

பசி என்னும் கொடுமையை தீப்பிணி தீண்டல் என்கிறார் வள்ளுவர். நோய், பிணி இந்த-இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தருவது போல இருந்தாலும் நோய் வேறு பிணி வேறு எனக் கொள்ள வேண்டும். நோய் வரும், மருந்து உண்டால் தீரும். ஆனால் பிணி என்பது நம்மைப் பிணித்துக் கொண்டே இருக்கும்.

ஆசை வலியதா? பசி வலியதா? என்று ஆராய்ந்தால் ஆசையற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் பசியற்றவர்கள் என இருக்கமுடியாது. சமய குரவர்களுக்கும் பசி இருந்தது. சித்தர்களுக்கும் பசி இருந்தது, ஞானிகளுக்கெல்லாம் ஆசை இல்லை. பசி இருந்தது. பட்டினத்தடிகள் முற்றுந் துறந்த துறவி.

**"பார் அனைத்தும் பொய் எனவே**
**பட்டினத்துப் பிள்ளையைப் போல்**
**ஆரும் துறத்தல் அரிது".**

என்று தாயுமானவரால் சிறப்பிக்கப்படுகிற பட்டினத்தடிகள் ஒருநாள் இரவில் அவரைப் பசித்தீ வருத்த ஒரு மூர்க்கனின் வீட்டில் சென்று வெளியே நின்று கையைத் தட்டினார். அவ்வீட்டு மூர்க்கன் அவரைக் கள்வன் என்றெண்ணி தடியினால் அடித்தான். அப்போது அயல் வீட்டவன்

ஓடிவந்து அவரை அந்த மூர்க்கனிடமிருந்து காப்பாற்றி அழைத்துச் சென்று உண விட்டுப் பசியைப் போக்கினான்.

அவர் "இருக்குமிடம் தேடி என் பசிக்கு அன்னம் உருக்கமுடன் தந்தால் உண்பேன்" என்று தம் கருத்தை வெளியிட்டார்.

ஆசையை மூன்றாகப் பிரிக்கலாம். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை. இந்த மூவாசையில் வலியது எது? பெண்ணாசை. மண்ணாசை இல்லாதோர் பலருண்டு, பொன்னாசை இல்லாதோர் பலருண்டு. ஆனால் பெண்ணாசை இல்லாதோர் இல்லை. இருந்தாலும் மிகச் சிலரே. மண்ணாசையும் பொன்னாசையும் உள்ளத்தால் அனுபவிக்கும் ஆசைகள். பெண்ணாசையோ உள்ளத்தால் மட்டு மன்றி உடலாலும் அனுபவிக்கப்படும் ஆசை. அதனால்தான் இவ்வாசை வலியது. பெண்ணாசையைத் துறப்பதே துறவு எனப்பட்டது.

**அறந்தான் இயற்றும் அவனிலும்**
**கோடி அதிகம் இல்லம்**
**துறந்தான் அவனில் சதகோடி**
**உள்ளத் துறவு உடையோன்**
**மறந்தான் அறக்கற்று அறிவோடு**
**இருந்து இரு வாதனையற்று**
**இறந்தான் பெருமையை என் சொல்லு**
**வேன் கச்சி ஏகம்பனே.**

என்றார் பட்டினத்தடிகள். துறவு வாழ்க்கை மேற்கொண்ட பட்டினத்தடிகளுக்கும் பசி இருந்தது.

மூவாசையிலும் வலிமையான இப் பெண்ணாசை அல்லது ஆணாசையா யினும் சரி ஓர் ஆணுக்கோ, பெண்ணுக்கோ எப்போது வருகிறது. குழந்தைப் பருவத்தில், சிறு வயதாயிருக்கும் பருவத்தில் வருவதில்லை. இளமைப் பருவத்தில் வந்து முதுமைப் பருவத்தில் அற்றுவிடுகிறது.

ஆனால் பசி எப்போது வருகிறது. எப்போது போகிறது. ஆசையைப் போல் பசி ஒரு பருவத்தில் வந்து ஒரு பருவத்தில் போவதில்லை. அது எப்போதும் இருப்பது. பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்நாள் முழுவதும் இருப்பது. பத்து மாதம் கர்ப்பவாச காலத்தில் கொப்பூழ் கொடிவழியாக உணவுச் சத்தைக் கிரகிக்கிறது. குழந்தை பிறந்ததும் கொப்பூழ் கொடியை நறுக்குகிறோம். அதன் பின்னர் தாய்ப்பாலூட்டுகிறோம். உயிர் உடம்பு எடுக்கும்போதே பசியும் உடன் எடுத்தது. உடம்பும் உயிரும் ஒன்றாக இருக்கும்வரை பசி இருக்கும். அது மட்டுமல்ல, ஒன்றாக இருப்பதற்கு பசியும் உணவும் ஒரு காரணமாகிறது. உடம்பை விட்டு உயிர் நீங்கின் பசியும் நீங்கும். அதன் பின்னரும் நாம் வாய்க்கரிசி போடுகின்றோம். வாய்க்கரிசி என்று பேர் வந்தது அது வயிற்றுக்குப் போகாததால் ஆகும். கருவறை தொடங்கி கல்லறை வரை பசி உண்டு. பசி எப்பொழுதும் இருப்பது. இதனாற்தான் ஆசையை விட பசியே வலியது என அறிகின்றோம்.

ஆசை உயிரைக் கொல்லாது, பசி உயிரைக் கொல்லும். பசியால் உயிர் போகிறது. பசி உயிரை எடுக்கிறது என்று சொல்கின்றோம்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சொல்கின்றோம். சிலநாள் பட்டினி இருந்தாலே உயிர் போய்விடும்.

பட்டினிச்சாவைப் பார்த்திருக்கிறோம், ஆசைச்சாவைக் கேட்டதுமில்லை. ஆசை ஓர் உடம்பிலிருந்து உயிரைப் போக்கவல்ல தல்ல.

வறுமை ஒரு மனிதனை அடியோடு அழிக்கும் இயல்புடையதென்பதை கந்த ரனுபூதி விளக்குகிறது. அழகு, செல்வம், நல்மணம், நற்குணம், குடியின் உயர்வு, குலப்பெருமை ஆகிய 6 நலன்களையும் வறுமை அழித்துவிடும். ஆகவே தான் அதனைப் பாவியென்கிறார் அருணகிரிநாதர்.

**வடிவும் தனமும் மனமும் குணமும்**
**குடியும் குலமும் குடி போகியவா**
**அடி அந்தமிலா அயில்வேல் அரசே**
**மிடியென்று ஒரு பாவி வெளிப்படினே**
**– கந்தரனுபூதி**

கொடியவற்றுள் எல்லாம் கொடியது பசியே. பசியென்னும் கொடுமையை வடலூர் இராமலிங்க வள்ளல் பெருமான் சொன்னதுபோல் எவரும் சொன்னதில்லை. வள்ளலாரின் கொள்கைகளுள் தலை யாயது ஜீவகாருண்யம். ஜீவகாருண்ய ஒடுக்கமே கடவுள் வழிபாடு என்பது அவரின் கொள்கை. ஜீவகாருண்யத்தை வள்ளலார் இரண்டு வகையில் வற் புறுத்துவார்.

1. அற்றார் அழிபசி தீர்த்தல்
2. புலால் மறுத்தல்

பசிக்கின்றவர்களுக்கு பசியைப் போக்கு கின்ற அரிய செயல் குறித்து விரிவாக விளக்குகிறார்.

ஜீவன்களுக்கு பசி அதிகரித்த காலத்தில் "ஜீவஅறிவு விளக்கமில்லாமல் மயங்குகிறது. அது மயங்கவே அறிவுக்கறிவாகிய கடவுள் விளக்கம் மறைபடுகிறது. அது மறையவே புருட தத்துவம் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே பிரகிருதித் தத்துவம் மழுங்கு கின்றது. அது மழுங்கவே குணங்களெல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறு கின்றது. புத்தி கெடுகின்றது. சித்தம் கலங்கு கின்றது. அகங்காரம் அழிகின்றது. பிராணன் சுழல்கின்றது. இவ்வாறு பசியின் கொடுமையை சித்திரிக்கின்றார். பட்டினி கிடப்போர் முகத்தைப் பாராதிருப்போரைக் கண்டு பெருமான் மனம் வெதும்பிப் பேசுகின்றார்.

**வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்**
**வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறிவீர்**
**வெட்டிமேல் வெட்டி வைத்து ஆள்கின்றீர் வயிற்றுப்**
**வெட்டியை நிரம்பிக்கொண்டொட்டியுள் இருந்தீர்**
**பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்**
**பழங்கஞ்சியாயினும் வழங்கவும் நினையீர்**
**எட்டிபோல் வாழ்கின்றீர்! கொட்டிபோல் கிளைத்தீர்!**
**எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே!**

பைத்தியம் பிடித்த மக்களே இவ்வாறு செய்யலாமோ? என்று கேட்கின்றார் வள்ளலார். இதையே வள்ளுவரும்

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃது ஒருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி**
என்றார்.

ஒருவன் தன் பொருள்களையெல்லாம் சேர்த்து வைப்பதற்கு ஒரு சிறந்த காப்பிடம் எதுவென்றால் வறியவனின் கொடிய பசியைத் தீர்க்கும் அறச்செயலாகும் என்கிறார் வள்ளுவர்.

அன்னமாகிய சோற்றையிட்டால் முத்தி யாகிய சோற்றைப் பெறலாம் என்பதும் வள்ளலாரின் கருத்தாகும். சோறு என்ற சொல்லுக்கு அன்னம் (உணவு) என்று

பொருள். முத்தி என்ற பொருளும் உண்டு. முத்தி என்ற பொருளில் முன்னோர்கள் சொல்லியிருப்பது தெரிந்தாலும் அவரின் திருவுள்ளம் முத்தியென்னும் பொருளை விட உண்ணும் சோறு என்ற பொருளையே ஏற்றுக்கொள்கிறது. "சோற்றானைச் சோற்றில் உறும் சுகத்தினானை" என்று இறைவனைப் பாடுகிறார்.

பசி தவிர்த்தலாகிய ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல் என்ற அருளுரையை மணிமேகலைக் காப்பியத்தில் ஆபுத்திரன் வரலாற்றில் காணலாம்.

தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று கூறிய புரட்சிக் கவிஞன் பாரதி மிக அழகாகச் சொன்னான்.

**வயிற்றுக்குச் சோற்றிடவேண்டும் – இங்கு**
**வாழும் மனிதருக்கெல்லாம்**
**பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப்**
**பாரை உயர்த்திட வேண்டும்.**

என்று ஆணித்தரமாக உரைத்தவன்.

ஈழத்திலும் ஆறுமுகநாவலருக்குப் பின் அவர் வழியில் தம் வாழ்வை அர்ப்பணித்து பல தெய்வீகக் கைங்கரியங்களை ஆரம்பித்து வழிநடத்தியவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்.

**படமாடக் கோயில் பகவர்க்கொன்றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன்றீயில்**
**படமாடக் கோயில் பகவற்கஃதாமே.**

என்ற திருமந்திர வரிகளுக்கேற்ப நடமாடும் கோயிலில் தெய்வத்தைக் கண்டவர் அன்னையவர்கள்.

1982ஆம் ஆண்டில் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற இல்லத்தைத் தோற்றுவித்து கோயிலின் சமூகப் பணியின் மகுடமாக இப்புனித பணியை நிறைவேற்றியவர். அவருடைய தூய சிந்தனை பல நூறு பெண் பிள்ளைகள் வாழ்வு பெற்றது மட்டுமல்லாது, கல்வி உலகிலும் பிரகாசிக்கச் செய்தவர்.

துர்க்காதேவி தேவஸ்தானத்தில் செவ்வாய் வெள்ளி நாட்களிலும், நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்திலும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்தவர். ஒரு மனிதன் போதும் என்று சொல்லக்கூடிய நிகழ்வு சாப்பாடு வழங்கும் போது மட்டுமே என அன்னையவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள். தன் வாழ்க்கைக் காலம் வரை அன்னபூரணியாக செயற்பட்ட அன்னை அவர்களின் பெரும்பணியை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் தொடர்ந்து செயற்படுத்தி வருகின்றமை போற்றுதற்குரியது.

எனவே அற்றார் அழிபசி தீர்த்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டியது மானிடஜென்மம் எடுத்த நம் ஒவ்வொருவரினதும் கடமையென உணர்ந்து செயற்படுவோமாக.

**"ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்த்திருந்துண்மின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கையுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.**

*– திருமந்திரம்*

# கொல்லாமை குறித்துக் கோழி




கொல்லாமையை வலியுறுத்தி
கொள்கைகள் பேசும்
உங்கள் நாக்குகளால் – நான்
வாரந்தோறும் புசிக்கப்படுவது
வழக்கமாகி விட்டது.

ஐந்தறிவு கொண்ட ஆடுகளைக் காட்டிலும்
ஓரறிவு குறைவான என் இனத்தை
அதிகமாகப் பலியிடுவது ஏன்?
சுவையும் மிகுதி – விலையும் குறைவு
சுயநலம் தான் காரணம்

நெற்பயிரை கொத்தவரும்போது
என்னை நித்தமும்
துரத்தியடிக்கும் மனிதர்களே....
என் முட்டைகளைத் திருடும்போது மட்டும்
உங்கள் மனச்சாட்டி உறுத்தவில்லையா?

கழுத்தைத் துண்டாக
வெட்டி கறிவிருந்து படைக்கும்
கண்ணியவான்களே....
மனிதநேயம் என்ற சொல்
மனிதர்களுக்கு மட்டுமா சொந்தம்?

கூரைமேல் ஏறிக் கூவிய எங்களை
கூடையிலும் பையிலும்
அடைத்துச் செல்லாதீர்கள்!

கடைசி நிமிஷங்களுக்காக
காத்திருக்கும் எங்களிடம்
இப்போதாவது கண்ணியத்தை
கடைப்பிடியுங்கள்

*அ. ஜெயச்சந்திரன்*

# புங்குடுதீவுக்குப் புகழ்வாங்கித் தந்த பேராசிரியர் வி. சிவசாமி

தம்பிஜயா தேவதாஸ் அவர்கள்

சமஸ்கிருதம், வரலாறு, தமிழ் இந்துப் பண்பாடு, நுண்கலை என பல்துறைகளிலும் ஆளுமை பெற்று விளங்கிய வாழ்நாள் பேராசிரியர் வி. சிவசாமி 8-11-2014இல் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அடக்கமும் அமைதியும் கொண்ட பேராசிரியர் வி.சிவசாமி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறைத் தலைவராக இருந்து, பல்லாயிரக் கணக்கான மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந் தவர். பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி யவர். ஆரியர், தமிழர் வரலாறு சம்பந்த மான பல நூல்களை எழுதியவர். தான் பிறந்த புங்குடுதீவுக் கிராமம் பற்றியும் அங்குள்ள கோயில்கள் பற்றியும் பல கட்டுரைகள் எழுதியவர்.

1933ஆம் ஆண்டு புங்குடுதீவு 4ம் வட்டா ரத்தில் பிறந்த விநாயகமூர்த்தி சிவசாமி, புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இடை நிலைக் கல்வியையும் கற்றவர். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர் கல்வி கற்ற இவருக்கு 1955ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு நேரடி யாகப் பிரவேசம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

யாழ்ப்பாணக் கல்லூரியில் படிக்கும் பொழுது இவருக்கு எழுத்தின் மீது ஆர்வம் ஏற்பட்டு விட்டது. அக்கல்லூரியின் இள ஞாயிறு சஞ்சிகையில் எழுதத் தொடங்கினார். பின்பு இச்சஞ்சிகையின் ஆசிரியர் குழுவிலும் சேர்ந்து இயங்கினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ், சமஸ்கிருதம், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்றுத் தேறினார். இப்பல் கலைக்கழகத்தின் 'இளங்கதிர்' சஞ்சிகை யிலும் இந்தியாவின் 'பாரதி' சஞ்சிகை யிலும் இவரது ஆய்வுக் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின.

1958இல் பொதுக்கலைமாணிப் பட்டத் தேர்வில் சித்திபெற்றார். 1981இல் லண்டன் பல்கலைக்கழகம் நடத்திய சமஸ்கிருதச் சிறப்புத் தேர்வில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் சித்தியடைந்தார். அன்று இவ்வாறு சித்தியடைந்த ஒரேயொரு இலங்கைத் தமிழர் இவர் மட்டுமே.

தான் கல்வி கற்ற யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டதாரித் திணைக்களத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். 1962இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்று உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நிறுவப் பட்ட போது அங்கு தொல்லியல் வரலாறு மற்றும் சமஸ்கிருத விரிவுரையாளராக நியமனம் பெற்றார். 1998இல் சமஸ்கிருதத் துறை தலைவராக உயர்ந்தார். சமஸ்கிருதம், இந்துப் பண்பாடு பாடங்களைப் பயின்ற

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

பேராசிரியர் வி. சிவசாமி எழுதிய 'ஆரியர் ஆதி வரலாறும் பண்பாடும்' என்ற முதலாவது நூல் 1976இல் வெளிவந்தது. இராமநாதன் கலைப்பிரிவு மன்றம், இசை, நடனம் பற்றிய இவரது கட்டுரைகளைத் தொகுத்து கலாமஞ்சரி என்ற தலைப்பில் 1983இல் வெளியிட்டது. இவரது கல்விப் பணியின் 25 ஆண்டுகள் நிறைவு பெற்ற காலத்தில் இந்நூல் முக்கியத்துவம் பெற்றது.

இவர் எழுதிய நூல்களில் சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள், தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் ஒரு வரலாற்று நோக்கும், தமிழும், தமிழரும் இந்துப் பண்பாடு அன்றும் இன்றும் போன்ற நூல்கள் முக்கியமானவை.

புங்குடுதீவுக் கோவில்கள் வெளியிடும் கும்பாபிஷேக மலர்களில் எல்லாம் இவருடைய கட்டுரைகள் இடம்பெறத் தவறுவதில்லை. அந்த அளவுக்கு இவருக்கு அக்கிராமத்தின் அத்தனை கோவில்களினதும் மகிமையும் வரலாறும் தெரிந்திருந்தது.

இவருடைய நூல்கள் பலவற்றின் மூலமும் இவரின் சமஸ்கிருத புலமை புலப்படும். இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் சில ஆங்கிலமொழியில் வெளிநாட்டுச் சஞ்சிகைகளிலும் வெளி வந்துள்ளன. இவருக்கு ஆங்கிலப்புலமை இருந்தும், தமிழ் மாணவர்களின் சமூக நலன்கருதி கூடுதலாக தமிழிலேயே எழுதியுள்ளார்.

இவர் எழுதிய நூல்களுக்கு பல விருதுகள் கிடைத்துள்ளன. சமஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள் என்ற நூலுக்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. இவரின் ஆய்வுப் பணியின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இவருக்கு 1989இல் சமஸ்கிருத இணைப்பேராசிரியர் பதவியை வழங்கியது.

1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரை சமஸ்கிருதப் பேராசிரியராக நியமித்தது. 1999இல் நடைபெற்ற வெள்ளிவிழா பட்டமளிப்பு விழாவில் இவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

பேராசிரியரின் தந்தையார் விநாயகமூர்த்தி நாட்டு வைத்தியம், சோதிடம் முதலியவற்றில் பெயர் போனவர். பல கோயில்களுக்குத் தர்மகர்த்தாவாவார். தந்தையைப் போலவே மகன் பேராசிரியர் வி. சிவசாமியும் புங்குடுதீவுக் கோவில்கள் பலவற்றுடன் தொடர்புடையவர்.

பேராசிரியர் வி.சிவசாமி தனது 81ஆவது வயதில் காலமானார். அவர் மறைந்துவிட்டார். அவரது பெயர், கல்வி, சமய உலகில் என்றும் நிலைத்து நிற்கும்.

# தங்க அம்மா!

தாயாக வாழ்ந்த எழிற் கன்னி, ஈழச்
சைவத்தை வாழ்விக்கப் பிறந்த செல்வி
ஓயாத சொற்பொழிவால் உலகம் உய்ய
உயிர்த்தமிழின் மகிமை சொன்ன தேவி, தெல்லித்
தாய் துர்க்கைக்கோவிலினைத் திருத்திப் போற்றி
சமயநெறிப் புரட்சிசெய்த சக்தி, தெய்வச்
சாயலுடன் மறைந்த அன்னாய்... நின் 'தொண்ணூறாம்
ஜனனதினம்'.... மனங்கசிந்துநினைவு கூர்ந்தோம்!

யுத்தத்தின் தீ... கொழுந்துவிட்ட காலை
ஊர்கள் பல கருகி... இடர் சுமந்தவேளை
எத்தனையோ சேய்களினைத் தத்தெடுத்து,
இந்துவாக வளரவைத்து, வாழவைத்து,
சத்தியத்தின் நிழலாக நின்று, துர்க்கைச்
சந்நிதானத் தலைவியாகவென்று, பெண்மை
அற்புதமாய், வழிகாட்டி நிமிர்ந்த அன்னை!
அழகுசைவத் தமிழ்காத்த 'புதிய ஔவை'!

"தங்கம்மாநீ" என்று பிறந்தபோது
'தங்கம்மா' என அழைத்தார்! வளர்ந்தபின் நீ
'தங்கமென' எமக்கிருந்தாய்! "நீதான் எங்கள்
தங்க அம்மா" என்றார் தாய்அறியாச் சேய்கள்!

த. ஜெயசீலன்

# இதய அஞ்சலி

## விகடகவி
## புலவர் மு. திருநாவுக்கரசு

(இளைப்பாறிய மாவட்ட நீதிபதி)



அளவை மண்ணில் பிறந்து
அருந்தமிழில் அரங்குகளைச் சிறப்பித்து
ஒப்பற்ற பதவிகளை வகித்து
ஒப்புரவாளராக விளங்கி
இறையடியில் இணைந்த
இனியவருக்காகப் பிரார்த்திக்கிறோம்.

## பேராசிரியர் வி. சிவசாமி

(இளைப்பாறிய சமஸ்கிருதத்துறை பேராசிரியர்,
யாழ். பல்கலைக்கழகம்)



பண்பும் பணிவும் பல்துறை ஆற்றலும்
பலருக்கு உதவும் பயன்நிறைந்த வாழ்வும்
எம்மண்ணில் தூய தொண்டாற்றி
எம்மைவிட்டுச் சென்ற நல்லறிஞருக்காகப்
– பிரார்த்திக்கிறோம்.

**நிர்வாக சபை**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# இதய அஞ்சலிக்குரியவர்கள்

## கொச்சிக்கடை தேவராசா

(தொழிலதிபர்)

எமது தேவஸ்தானத்தின் திருப்பணிக்கு பல வழிகளிலும் உதவிய அன்பரின் பிரிவு குறித்து கவலையடைகிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.

## ஐயா சச்சிதானந்தம்

( மூத்த ஊடகவியலாளர் )

எமது தேவஸ்தானத்தின் மீது குண்டுவீச்சு, செல்வீச்சு இடம்பெற்ற காலத்தில் ஊடகங்களின் ஊடாக குரல் கொடுத்தவரின் பிரிவு குறித்து எமது அஞ்சலிகளைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மசாந்திக்காக அம்பாளைப் பிரார்த்திக்கிறோம்.

**நிர்வாக சபை**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தனாம்,
தெல்லிப்பழை.

# பாரிசவாதம் (Paralysis)

**Dr. S. டிசிஜந்தி அவர்கள்**
*துர்க்காதேவி ஆயுள்வேத வைத்தியசாலை,*
*தெல்லிப்பழை.*

தற்போது பாரிசவாதத்தினால் தாக்கப்படும் மக்கள் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகிறது. பாரிசவாதம் எனப்படும் போது மூளையின் ஒரு பகுதிக்குச் செல்லும் இரத்த ஓட்டம் துண்டிக்கப்படும் போது ஏற்படுகிறது. இதனால் தசைகளிற்குச் செல்லும் நரம்புகளும் பாதிக்கப்படும். இதனால் கை, கால், முகம் போன்றன இயங்கமுடியாத நிலை ஏற்படுகிறது.

### இதன் வகைகள்

பாதிப்பின் அளவினைப் பொறுத்து இது உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியோ, பொதுவாக ஒரு பகுதியோ செயல் இழக்கும்.

**ஒரு பகுதி எனப்படும்போது**

1. முகம் – Facial paralysis
2. கை மட்டும்
3. குரல்வளை – கதைக்கமுடியும், குரலில் மாற்றம் ஏற்படும்.

**பொதுவாக எனப்படும்போது**

1. ஒரு அவயவம் பாதிக்கப்படல் (Honoplegia)
2. ஒருபக்க கை, கால் பாதிக்கப்படல் (Mebiplegia)
3. இரு கால்களும் சிலவேளை இடுப்பின் கீழ்ப்பகுதி முழுவதும் பாதிக்கப்படல் (Paraplegia)
4. இரு கைகளும், கால்களும் பாதிக்கப் படல் (Tetraplegia / Guadrioplegia)

### ஏற்படுவதற்கான காரணங்கள்

1. உயர்குருதி அமுக்கம்
2. சலரோகம்
3. தலையில் ஏற்படும் காயங்கள்
4. முள்ளந்தண்டில் ஏற்படும் காயங்கள்.
5. பரம்பரை

**இவற்றைவிட**

1. உடற்பருமன்
2. குடிப்பழக்கம், புகைத்தல் போன்றனவும் இது ஏற்பட காரணமாகலாம்.

### தடுப்பதற்கான அறிவுரைகள்

1. உயர்குருதி அமுக்கம், சலரோகம் உள்ள நோயாளிகள் வைத்திய ஆலோசனைப்படி தமது நோயினைக் கட்டுப் பாட்டில் வைத்திருத்தல் கட்டாயமாகும்.

- ♦ தவறாது தமது கிளினிக்கிற்குச் செல்லுதல்.
- ♦ கூறப்படும் உணவு, குடிபானம், பழக்க வழக்கங்களை முறைப்படி செய்தல்.
- ♦ உடலில் திடீர் மாற்றங்கள் ஏற்படும் போது கிளினிக் திகதி வரை பார்த்திராது உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெறல்.
- ♦ கூறப்படும் உடற்பயிற்சி, நாளாந்த வாழ்க்கை முறைகளைத் திறம்பட மேற்கொள்ளல்.

உ–ம் : கடவுளை வணங்குதல், தியானம், சூரிய நமஸ்காரம், மூச்சுப்பயிற்சி, யோகாசனம் போன்றன.

2. உடற்பருமனை ஒவ்வொருவரும் சரிபார்த்து அதாவது தமது உயரத்திற் குரிய நிறை இருப்பதனை உறுதிப் படுத்திக் கொள்ளுதல் இன்றியமை யாதது.
3. குடிப்பழக்கம், புகைத்தல் என்பவற்றை முற்றாக நிறுத்துதல் வேண்டும்.
4. 40 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு வரும் தம்மைப் பரிசோதித்துக் கொள் வதனால் மேற்படி நோய்கள் வராது பாதுகாத்துக் கொள்ள முடியும்.
5. குறிப்பாக 40 வயதிற்கு மேற்பட்ட வர்கள் இனிப்புப் பண்டங்கள், எண் ணெய் வகைகள், தேங்காய்ப்பால் அதிகம் பாவித்தல், மாப்பண்டங்கள் அதிகம் பாவித்தல் என்பவற்றைக் குறைத்தல் சுகதேகியாக வாழ வழி வகுக்கும்.
6. போதியளவு உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

உ–ம் : வீட்டுத்தோட்டம் சிறந்தது.

இவற்றிற்கு மேலாக ஒருவருக்கு பாரிசவாதம் ஏற்பட்டுவிட்டால் உடனடி யாக நோயாளியை மேலைத்தேய வைத் தியசாலைக்குக் கூட்டிச்செல்லுதல் சிறந்தது. அவ்வைத்தியசாலையில் பல பரிசோதனைகள் செய்யப்படும் (X-ray, CT scan, MRI scan, myelography, electro myography போன்றன)

பின்னர் ஓரிரு கிழமைகளின் பின்னர் வைத்தியசாலைகளில் இருந்து விடுவிக் கப்படும். அதன்போது உடற்பயிற்சி செய் யப்படுமாறு அறிவுறுத்தப்பட்டு விடுவிக் கப்படும். இந்நோயாளிகளைக் காலதாமத மன்றி ஆயுள்வேத வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிப்பீர்களானால் 2/3 மாதங்களில் நோயாளிகள் 70%-90% முன்னேற்றத்தை அடைவார்கள்.

காலதாமதம் ஏற்படுமிடத்து நோயாளி யின் முன்னேற்றத்தில் தாமதம் ஏற்படுகிறது. எனவே இந்த சேவையினை துர்ககாதேவி கிராமிய ஆயுள்வேத வைத்தியசாலையும் திறம்பட ஆற்றிவருவதனை இதில் குறிப்பிடுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

எனவே, மேற்கூறப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு நோயற்ற வாழ்வு வாழ் வோமாக.


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 : 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 : 222 3645**

# சிறுவர் விருந்து

# குன்றக்குடிக்குமரன்

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து!

வகுப்பேற்றப் பரீட்சைக்குத் கவனமாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள், வாழ்த்துக்கள்!

கார்த்திகை மாதம் என்றாலே கந்தப் பிரானின் நினைவும் கூடவே வரும். இன்று குன்றக்குடி என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமானின் திருவிளையாடல் ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ளுங்களேன்.

குன்றக்குடி என்பது சிறு குன்றும் குன்றைச் சூழ்ந்த இடமும் ஆகும். ஒரு சிறிய தனிக் கற்குன்று. அதன் மேலே ஒரு சிறு முருகன் கோயில். கற்பாறையைச் செதுக்கி அமைத்த சிறு படிக்கட்டு வழியே சிரமப்பட்டு ஏறிப் போய் யாராவது வழிபடுவார்கள். மற்றவர்கள் அடிவாரத்திலேயே இருந்து பொங்கிப் படைத்து வழிபட்டுச் செல்வார்கள். ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் சிவகங்கைச் சீமை என்று பேசப்பட்ட தென்பாண்டி மண்டலத்தில் மருதுபாண்டியர் என்ற சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர்.

நல்லொழுக்கம், வீரம், கொடை, சீலம் நிறைந்த மிகச் சிறந்த அரசர்கள் மருது பாண்டியர்கள்.

பெரிய மருது, சின்ன மருது என்ற இரு சகோதரர்கள் நல்லாட்சி நடத்தி வந்த காலத்தில் பெரிய மருதுவுக்கு ஒருமுறை முதுகிலே 'பிளவை நோய்' என்ற கட்டி ஏற்பட்டு தீராத வேதனையைக் கொடுத்தது. அரசரல்லவா! மிகச் சிறந்த வைத்தியர்கள் மிகவும் சிரத்தையுடன் கவனித்தும் நோய் மாறவில்லை. முதுகிலே புரையோடி தாங்கமுடியாத வேதனை கொடுத்தது. மருது பாண்டியர் துடித்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் மந்திரி ஒருவர் அரசரிடம் வந்து சுகம் விசாரித்துக் கொண்டிருந்தார். மருதுபாண்டியர் தமது தாங்க முடியாத வேதனைக்கு யாராவது மருந்து செய்யமாட்டார்களா என்று தவிப்புடன் கேட்டார்.

"அரசே! நேற்று இரவு ஒரு செட்டியார் என்னைச் சந்தித்தார். தான் அயலூர் வாசி என்றும், அரசருடைய பிளவை நோய்க்குக் குன்றக்குடி முருகனின் விபூதிதான் மருந்தென்றும் சொன்னார். சற்று நேரம் பேசிவிட்டுப் போய்விட்டார். எனக்கென்னவோ குன்றக்குடி முருகனிடம் அர்ச்சனை செய்து விபூதி கொண்டு வந்து பூசினால் நல்லதென்றே தோன்றுகிறது" என்று அந்த மந்திரி சொன்னார்.

"முருகா! முருகா! அப்படியானால் நீங்களே குன்றக்குடிக்குப் போய், முருகனுக்கு அபிஷேகம் பூஜை செய்து அருச்சனை விபூதி கொண்டு வாருங்கள்!" என்றார் மருது பாண்டியர். மந்திரியாரும் மறுநாட்காலை தகுந்த ஆயத்தத்துடன், ஆட்களும் கூடவர குன்றக்குடிக்குப் போனார். ஒரு அந்தணரையும் கூட்டிச் சென்று, சிரமப்பட்டுக் குன்றில் ஏறி, முருகப் பெருமானுக்கு அபிஷேகம், ஆராதனை செய்து, விபூதிப் பிரசாதம் கொண்டு வந்தார். அந்த விபூதியை நெற்றியிலும் பூசி, முதுகு முழுவதும் பூசிவிட்டார்கள். அடுத்தநாட் காலை எழுந்த அரசர் மருது பாண்டியருக்கு பிளவைக் கட்டி, புண் எல்லாம் மாறி - முதுகு மிக அழகாகக் காட்சி தந்தது! மருது பாண்டியருக்கு மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அரண் மனைவாசி களும் பிரதானிகளும் பெரிய விழா போல ஆடிப்பாடினர்.

மருதுபாண்டியர், தன்னை நோயினின்றும் மீட்ட குன்றக்குடி முருகனுக்கு, அந்தக் குன்றையே மிக அழகான கோயிலாக்கிவைத்தார். ஏறிச்செல்ல மிக வசதியாக, மழை வெயில் தாக்காதவாறு விதானம் அமைந்த படிக்கட்டுக்களையும் செதுக்கி வைத்தார். மிக அழகான கோயில், எளிதாக ஏறிச் சென்று தொழ வசதியான படிக் கட்டுக்கள் எல்லாம் உண்டு. தமிழும் சைவமும் தழைக்கப் பாடுபட்ட குன்றக்குடி அடிகளாரின் ஆதீனம் இப்போது கோயிலைப் பராமரிக்கிறது.

## கார்த்திகைக் குமரனின் புகழ் பாடும்

கார்த்திகையிற் கார்த்திகை
கந்தன் புகழ் பாடும்
கங்கையுமை மைந்தன் புகழ்
எண்திசையும் ஒளிதரும்
பார்முழுதும் தீபவௌரி
படர்ந்திருளை நீக்கிடும்
பச்சைமயில் வாகனனை
இச்சையோடும் தொழுதிடும்

குன்றமதில் நின்றொளிர்
குறத்திமண வாளனை
கூர்வடிவேல் வேந்தனை
கண்டுகரம் கூப்பிடும்
நன்று நன்று என்றுமே
நலம்படைக்கும் வேலனை
நின்றுகரம் கூப்பியே
திருபுகழும் பாடிடும்

தேவர்துயர் தீர்க்கவே
வந்தமயில் வீரனை
தேவசேனை நாதனை
கண்டுகரம் கூப்பிடும்
ஆவலுறத் தேன்கலந்து
ஆக்கியமா விளக்கொளி
தேவர்துயர் நீக்கியநற்
தேவன்புகழ் பாடிடும்

அல்லல் தீர்க்கும் ஆண்டவன்
அழகுவடி வேலவன்
வெல்லும்வடி வேலெடுத்து
விந்தை செய்யும் நாயகன்
சொல்லும் திருப் புகழினிக்க
சந்தமாகி நின்றவன்
சோதிமயில் வீரன் எங்கள்
தேவன் புகழ் பாடுவீர்.

– சு. குகதேவன், தெல்லிப்பழை.

உ

துர்க்காதேவி துணை



அன்னை சிவத்தமிழ்ச்செல்வி,

பண்டிதை, **கலாநிதி**

# தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

அவர்களின்

# 90வது பிறந்தநாள் அறக்கொடை விழா

**நாலம் : 07.01.2015 புதன்கிழமை காலை 08.30 மணி**

**இடம் : அன்னபூரணி மண்டபம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

**பேரன்புடையீர்,**

**வணக்கம்**

எதிர்வரும் 07.01.2015 புதன்கிழமை அன்று எங்கள் தேவஸ்தானத்தின் தெய்வநிலை எய்திய, பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையின் 90வது பிறந்தநாள் அறக்கொடை விழா துர்க்காதேவியின் திருவருளால் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ் விழாவில் அன்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகிறோம்.

வணக்கம்

**கலாநிதி ஆறு. திருமுருகன்**

*தலைவர்*

**திரு.நா.தவநாதன்**

**திரு.மு.அருளையா**

*(இணைச் செயலாளர் கள்)*

**திரு.அ. சண்முகநாதன்**

*பொருளாளர்*

**திரு.சு. ஏழூர்நாயகம்**

*உப பொருளாளர்*

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை,**

*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,*

*தெல்லிப்பழை.*

*22-12-2014*

தலைவர் :- **செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
( தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

**பிரதம விருந்தினர் – பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்கள்** (கல்வித்துறை ஆய்வாளர்)

**சிறப்பு விருந்தினர்கள்**

**வைத்திய நிபுணர் கிருஷாந்தி இராஜசூரியர் அவர்கள்**
(புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

**வைத்திய நிபுணர் த. பேரானந்தராஜா அவர்கள்**
(யாழ். போதனா வைத்தியசாலை)

**உயர்திரு. சிவபாதம் நந்தகுமார் அவர்கள்**
(கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம்)

## நிகழ்ச்சி விபரம்

**காலை 08.30 மணி : விஷேட ஆராதனை**

**காலை 08.40 மணி : சிவத்தமிழ்ச்செல்வி நினைவாலய வழிபாடு**

**காலை 08.50 மணி : திருவுருவச்சிலை முன் பிரார்த்தனை, திருமுறை பாராயணம்**

**வரவேற்புரை : திரு.சு.ஏழூர்நாயகம் அவர்கள்**
(உப பொருளாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

**ஆசியுரை : சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள்**
(பிரதமகுரு, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)

**சிவஸ்ரீ. இ. சுந்தரேஸ்வரக் குருக்கள்**
(அறங்காவலர், ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில், இணுவில்)

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
(முதல்வர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

**ஆன்மீகச்சுடர் – ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள்** (அமெரிக்கா)

**தலைமையுரை**

**பிரதமவிருந்தினர் உரை**

**சிறப்பு விருந்தினர் உரை**

# அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கல்

- **யாழ். போதனா வைத்தியசாலை இரத்த சுத்திகரிப்பு பிரிவு**
  **பெறுபவர் : வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா அவர்கள்**
  ( யாழ். போதனா வைத்தியசாலை )
- **சிவத்தமிழ்ச்செல்வி கல்வி நிதியம்**
  ( வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் திறமையின் உச்சமும் தேவைப்படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற்கொண்டு, நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்குதல் )
  **பெறுபவர் : திரு.சிவபாதம் நந்தகுமார் அவர்கள்**
  ( கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கல்வி வலயம் )

## சிவத்தமிழ் விருது வழங்கல் - 2015

### விருது பெறும் சான்றோர்கள்

1. **தெல்லிப்பழை தொழிலதிபர்**
   **தேசகீர்த்தி உயர்திரு லயன் ச. ஆறுமுகநாதன் அவர்கள்**
   ( உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

2. **வல்வெட்டித்துறை**
   **வைத்திய கலாநிதி க. மயிலேறும்பெருமாள் அவர்கள்**
   ( இளைப்பாறிய மாவட்ட வைத்திய அதிகாரி )

3. **கோப்பாய், இருபாலை**
   **பண்டிதர் த. இராசரத்தினம் அவர்கள்**
   (இளைப்பாறிய அதிபர், வருகை விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை )

4. **இணுவில்**
   **நாதஸ்வர வித்துவான்**
   **கலாபூஷணம் கே.ஆர். சுந்தரமூர்த்தி அவர்கள்** ( முதுபெரும் கலைஞர் )

5. **நவாலி**
   **சமூகசேவையாளர் திருமதி. ஜெயமணி ஜேசுசகாயம் அவர்கள்**
   ( இளைப்பாறிய ஆசிரியர், ஏழை பங்காளர் )

நன்றியுரை : **திரு.நா.தவநாதன் அவர்கள்**
( இணைச்செயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

அன்பர்கள் அபிமானிகள் அனைவரையும் அன்னையின் வைபவத்தில் கலந்துகொண்டு, நிறைவில் நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்** **நிர்வாக சபை**
**தெல்லிப்பழை, இலங்கை.**

### அறநிதிய வங்கி விபரம்


**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள் அறநிதியம்**

தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்
சேமிப்பு கணக்கு இல. : 1-0006-02-7248-5

தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்
சேமிப்பு கணக்கு இல. : 10072-02-0916-3

உ

துர்க்காதேவி துணை



# சிவத்தமிழ் விருதுபெறும் சான்றோர் 2015

## ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி, பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

## அவர்களின்

## 90ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழாவில்


## *கௌரவம் பெறும் பெருமக்கள்*

***ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,***
***தெல்லிப்பழை.***

**சிவத்தமிழ்ச்செல்வி பிறந்தநாள்**
**அறநிதியச் சபை,**

***07-01-2015***

## தேசமானி திரு.சரவணமுத்து ஆறுமுகநாதன் அவர்கள்
### (உபதலைவர், நிர்வாகசபை – ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )



துர்க்காபுரம் தெல்லிப்பழையைப் பிறந்தகமாகக் கொண்ட திரு. ஆறுமுகநாதன் அவர்கள் 1939.10.30இல் தம்பையா சரவணமுத்து தம்பிமுத்து அன்னப்பிள்ளை தம்பதியினரின் மகனாகப் பிறந்தார். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று சிரேஸ்ட தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றார். தமது தந்தை வழியில் விவசாயத்தைத் தொழிலாக மேற்கொண்டு பின்னர் WALKER & SONS நிறுவனத்தில் தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு இலங்கையின் முக்கிய இடங்களில் கட்டிட ஒப்பந்த வேலைகளைச் செய்தார்.

பின்னர் தானே கட்டிட ஒப்பந்த காரர் ஆகி பல எண்ணிக்கையான கட்டிடங்கள், மண்டபங்கள் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டார். இவற்றில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம், ஆவரங்கால் சிவசக்தி மண்டபம், கேன் புற்றுநோய் வைத்தியசாலை, பல கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்ட யா/கொக்குவில் தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவர் கட்டிட வேலைப்பணியாளராக இருந்த காலத்தில் தேவஸ்தான கட்டிட நிர்மாணப் பணிகளுக்கு கல், மணல், சீமெந்து என்பவற்றைக் கடனாக கொடுத்து உதவி இருக்கின்றார். இவற்றை 1973, 1974 காலப்பகுதி ஆண்டறிக்கைகளில் குறிப்பிடப்பட்டு இருப்பவை வரலாற்றுப் பதிவாகும்.

1976இல் எங்கள் துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபையில் உறுப்பினராக இணைந்து 1983–1989 வரை உப தனாதிகாரியாகவும் 2007இல் இருந்து இன்று வரை உபதலைவராகவும் பணியாற்றி வருகிறார். இத் தேவஸ்தானம் மேற்கொண்ட சகல திருப்பணிகளிலும் திருப்பணிக் குழு உறுப்பினராக தமது பங்களிப்பை வழங்கி வந்தார். தற்போது நிர்மாணிக்கப்பட்டுவரும் துர்க்காதேவி வீட்டுத்திட்டம் இவரது நேரடிப் பார்வையில் நடைபெற்று வருகின்றது.

தேவஸ்தானத்தில் நடைபெற்று வருகின்ற செவ்வாய்க்கிழமை அன்னதானம் மகோற்சவ கால அன்னதானம் என்பவற்றுக்குப் பொறுப்பாக இவர் ஆற்றி வருகின்ற பணி அளப்பரியது. மேலும் கீரிமலை நகுலேஸ்வரர் சிவன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், காசி விநாயகர் ஆலயம் ஆகிய ஆலயங்களில் மகோற்சவகால அன்னதானப் பொறுப்பையும் மேற்கொண்டு பணியாற்றி வருகின்றார்.

திரு. ஆறுமுகநாதன் அவர்கள் சமயப்பணிகளுடன் மட்டும் நின்று விடாது சமூகப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். தெல்லிப்பழை மல்லாகம் அரிமாக் கழகத் தலைவராகவும், வலயத் தலைவராகவும், மாவட்டத் தலைவராகவும் விளங்கியுள்ளார். தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் சுய தொழில் பயிற்சி நிலைய கட்டிடம் ஒன்றை அமைத்து தையற் பயிற்சி, கணணிப் பயிற்சி ஆகியவற்றை இலவச சேவையாக மேற்கொண்டு வருகின்றார். இவரது சமூகப் பணிகளைப் பாராட்டி சர்வதேச கூட்டுறவு விழாவில் "சிறந்த கூட்டுறவாளர்" என கௌரவிக்கப்பட்டார். மேலும் அகில இலங்கை குணா பவுண்டேசன் நிறுவனம் 28.01.2013இல் நுவரேலியாவில் நடாத்திய விழாவில் "தேசமானி", "தேசபந்து", "லங்காபுத்திர", "விஸ்வகீர்த்தி" ஆகிய நான்கு விருதுகள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

எங்கள் தேவஸ்தான பெருந்தலைவர் தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் பெருவிருப்புக்கு ஆளாகிய இவரை உபதலைவராக நியமித்த பெருமை பெற்றவர். "மு" என யாவராலும் அன்பாக அழைக்கப்படும் திரு. ஆறுமுகநாதன் அவர்கள் 40 வருடங்களாக

தேவஸ்தானப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்திக் கொண்டவர். இவரது தன்னலமற்ற சேவையை கௌரவிக்கும் முகமாக இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.



## வைத்திய கலாநிதி
## கனகசுந்தரம் மயிலேறும் பெருமாள் அவர்கள்

வடமராட்சியில் பருத்தித்துறை நா.மு. ஒழுங்கையை வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்ற வைத்திய கலாநிதி மயிலேறும்பெருமாள் அவர்கள் 23.06.1941 இல் பிறந்தார். இவர் தமது ஆரம்பக் கல்வியை வல்வை சிவகுரு வித்தியாசாலையிலும் உயர் கல்வியை யா/சென்.ஜோன்ஸ் கல்லூரியிலும் பெற்றுக்கொண்டார். வைத்தியக் கல்வியை மேற்கொள்வதற்காக இந்தியா சென்று தஞ்சாவூர் வைத்தியக் கல்லூரியில் கற்று வைத்தியராக மீண்டும் தாயகம் திரும்பினார். அரசசேவையில் இணைந்து கொண்ட வைத்திய கலாநிதி அவர்கள் 1974இல் மாத்தறை அரசினர் வைத்தியசாலையில் நியமனம் பெற்றார். தொடர்ந்து சுற்றயல்கூறு மினிப்பே ஆதார வைத்தியசாலை, மன்னார், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் மாவட்ட அதிகாரியாக 1985வரை கடமையாற்றினார். நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையால் வெளியேறி சவுதி அரேபியாவில் நான்கு வருடங்கள் பணியாற்றி மீண்டும் 1991இல் இலங்கைக்கு திரும்பி வந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என்பனவற்றில் இரண்டு வருடங்கள் கடமையாற்றினார். இடம்பெயர்விற்கு முன் வன்னியில் தனி ஒரு வைத்தியராகக் கடமை புரிந்துள்ளார்.

1994இல் மீளவும் அரசசேவையில் இணைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடமையாற்றி 1997இல் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் 2001இல் ஓய்வு பெறும்வரை மாவட்ட வைத்திய அதிகாரியாக பணியாற்றினார். மீண்டும் மீள் நியமனம் பெற்று அதே வைத்தியசாலையில் 2014 வரை கடமையாற்றி பின்னர் மருதங்கேணி மாவட்ட வைத்தியசாலை, அடம்பன் வைத்தியசாலையிலும் பணியாற்றி பெருமை சேர்த்தார். 2014.10.31இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுத் தற்போது அமைதியாக ஓய்வுக்காலத்தை அனுபவித்து வருகிறார்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் இவர் கடமையாற்றிய 17 வருடங்களும் அவ் வைத்தியசாலையின் பொற்காலம் எனலாம். அவ் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு வல்வெட்டித்துறை சார்ந்த மக்களிடமும் நிறுவனங்களிடமும் ஆதரவு பெற்று வைத்திய நிறுவனம் திறமையாகச் செயற்படுவதற்கு முன்னின்று உழைத்தார். நல்ல நிர்வாகத்திறனும் சிறந்த ஆளுமையும் கொண்ட வைத்தியராக வல்வெட்டித்துறை மக்களின் அபிமானத்தையும் பெற்ற வைத்தியராக விளங்கினார். வைத்திய உலகில் இவரின் பணி மகோன்னதமானது.

எமது பெருந்தலைவர் சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அறக்கொடை விழாவில் வருடம் தோறும் வைத்திய சேவையில் அரும்பணியாற்றிய வைத்தியர் ஒருவரை கௌரவிப்பது என்ற மரபிற்கமைய வடமராட்சியின் புகழ்பூத்த மூத்த வைத்தியராக விளங்கி வரும் வைத்திய கலாநிதி மயிலேறும்பெருமாள் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கிக் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



# சைவப்புலவர் பண்டிதர் தம்பிப்பிள்ளை இராசரத்தினம் அவர்கள்

விதானையார் வீதி இருபாலையை வதிவிடமாக வாழ்ந்துவரும் பண்டிதர் தம்பிப்பிள்ளை அவர்கள் 08.07.1937இல் பிறந்தார். இவர் தமது இளமைக் கல்வியை யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் பெற்று கல்வி பொதுத்தராதரப் பரீட்சையில் சித்தி அடைந்தார். பின்னர் 1960இல் ஆரிய திராவிட பாஷாபிருத்திச் சங்கம் நடாத்திய பிரவேச பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்து தமிழில் உள்ள இலக்கண நூல்களைக் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தால் தொடர்ந்து கற்று 1962இல் பாலபண்டிதர் பரீட்சையிலும், 1964இல் பண்டித பரீட்சையிலும் சித்திபெற்று பண்டிதர் ஆனார். மேலும் சைவ சித்தாந்த நூல்களைக் கற்க வேண்டுமென்ற ஆர்வத்தால் அவற்றை நன்கு கற்று 1965இல் சைவப்புலவர் பரீட்சையில் சித்திபெற்றார்.

இப் பரீட்சைகளுக்கு கல்வி நிலையமாக அமைந்திருந்த மல்லாகம் அமெரிக்கமிஷன் பாடசாலை (தற்போது கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி கனிஸ்ட வித்தியாலயம்) யில் கற்கும் போது மறைந்த எமது பெருந்தலைவர் தங்கம்மா அப்பாகுட்டி அவர்களுடனான தொடர்பு ஏற்பட்டதையும் மார்கழித் திருவாதிரையின் போது திருக்கேதீஸ்வர திருவாசக மடத்தில் திருவாசகம் சொற்பொழிவாற்ற சென்றபோது தம்மையும் கூட அழைத்துச் சென்றமையைப் பெருமையாகவும் இன்றும் தன் மனதில் மகிழ்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது எனவும் நினைவு கூருகின்றார்.

01-03-1966 ஆசிரியராக முதல் நியமனம் பெற்று இரத்தினபுரி மாவட்டத்தில் கடமையாற்றி 1979, 1980 ஆண்டுகளில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இந்துசமய விசேட பயிற்சி நெறியை மேற்கொண்டிருந்தார். தொடர்ந்து ஆசிரியப் பணியை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் பின்னர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நிறைவான கற்பித்தலைச் செய்து 07-07-1997ல் ஆசிரிய பணியிலிருந்தும் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்றதன் பின்னர் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1998-2005 வரையுள்ள காலப்பகுதியில் பகுதிநேர விரிவுரையாளராக கடமையாற்றி வந்தார். ஆசிரியராகப் பணியாற்றிய பாடசாலைகளில் திருமுறை ஓதல், நற்சிந்தனை என்பனவற்றை நிகழ்த்தியும் குருபூசை தினங்களில் சமய சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியும் மாணவர்களின் சமய அறிவையும் ஒழுக்கத்தையும் மேம்படச் செய்தார். மல்லாகம் கல்வி நிலையத்தில் பண்டிதர் கழகம் அமைந்திருந்தது. அக்கழகத்தின் "பண்டிதன்" இதழ் மலர்க் குழு உறுப்பினராக இருந்து கையெழுத்துப் பிரதியாக மாதம் ஒரு வெளியீடும், சிறப்பு வெளியீடாக வருடமொரு வெளியீடும் இடம் பெற்றது. 1964இல் வெளியிடப்பட்ட சிறப்பிதழ் அறிஞர்கள் பலராலும் பாராட்டப்பட்டதாக நினைவு கூருகிறார்.

தற்போது தமது ஓய்வுக்காலத்தை மிகவும் பயனுள்ள வகையில் ஆலயங்களில் திருமுறைகளை பண்ணோடு பாடி வருகின்றார். இருபாலை கற்பக விநாயகர் ஆலயத்தின் திருப்பணிச்சபையின் உறுப்பினராகவும், உப தலைவராகவும், 10 வருடங்கள் தலைவராகவும் பணியாற்றி தற்போது பரிபாலன சபையின் காப்பாளராக மேற்பார்வை செய்து வருகின்றார்.

இவர் ஒரு விவசாயியின் மகனாக இருந்தும் தமிழ் மீது கொண்டிருந்த பற்றினால் விவசாயத்தை செய்து கொண்டே தமது அயரா முயற்சியால் சைவப்புலவராகி, பண்டிதராகி எமக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். இவ்வாறாக தமது வாழ்க்கையை சீரிய முறையில் அமைத்து வாழ்ந்து வரும் நல்லாசான், சைவப்புலவர், பண்டிதர் இராசரத்தினம் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.



# நாதஸ்வரவித்துவான் கலாபூஷணம் இ.சுந்தரமூர்த்தி அவர்கள்

அமரர்களான இராசு கௌரியம்மா தம்பதிகளின் மகனாக 17.09.1939ல் இணுவில் எனும் கலைவளம் நிறைந்த ஊரில் சுந்தரமூர்த்தி அவர்கள் பிறந்தார். இணுவில் சைவமகாஜனா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் இயற்கையாகவே இசை ஞானமுள்ளவராக இருந்ததால் விஸ்வலிங்கம் கோதண்டபாணியின் மங்கல இசைக் குழுவில் தாளக் கலைஞராக சிறுவயதிலேயே கேள்வி ஞானத்தை வளர்த்துக் கொண்டார். அக்காலத்தில் கோண்டாவிலில் தங்கி யிருந்த தமிழகநாதஸ்வர கலைஞரான திருநெல்வேலிக் காவல் நாராயண சாமியிடம் பல ஆண்டு குருகுல முறைப்படி இக்கலையின் அடிப்படைகளை கற்று அதன்பின் விஸ்வலிங்கம் உருத்திராபதி, பின்னர் மாவிட்டபுரம் ராசாவிடம் குருகுலமுறைப்படி கற்று அவரது குழுவில் இணைந்து வாசிக்கும் சந்தர்ப்பத்தையும் பெற்றுக்கொண்டார்.

இவ்வாறு பல இசையாளர்களுடன் வரன்முறை தவறாது நாதஸ்வரக் கலையை கற்றுக்கொண்டதால் ஒப்பற்ற மங்கல இசைக் கலைஞராக இவர் வளர்ச்சிகண்டு 1960ல் தமிழகத்தில் இருந்து வருகை தந்து ஈழத்தில் தங்கியிருந்து நாடுமுழுவதும் மங்கலஇசை நிகழ்வுகளை வழங்கிய திருவாரூர் இராசரத்தினம் பிள்ளையுடன் இணைந்து வாசித்து தனது தனித்துவமான திறன்களை நிலைநாட்டினார்.

இவ்வாறு நீண்டகால கற்றலும் ஆற்றுகை அனுபவமும் பெற்ற இவர் இராசரத்தினம் பிள்ளையின் ஆசீர்வாதத்துடன் 1963ல் தனித்துவமான குழுவை அமைத்து தனது இசைத்தொண்டை நாடு முழுவதும் ஆற்றத்தொடங்கினார். ஆலயத்திருவிழாக்களிலும், பண்பாட்டு நிகழ்வுகளிலும், இல்லங்களில் நடைபெறும் சடங்குகளிலும், இசை விழாக்களிலும் மரபுவழி தவறாத மங்கல இசையை இன்றுவரை வழங்கிவரும் இவர் நேரக்கட்டுப்பாடு கொண்ட நேர்மையான கலைஞராக தன்னை பண்படுத்திக்கொண்டார். 1981ல் தமிழகத்தில் சமயபுரமுத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பூச்சொரி விழாவில் நாதஸ்வர இசைவழங்கி ஈழத்துக் கலைஞர்களின் பெருமையை நிலைநாட்டினார். இக்கலையை ஏனையோருக்கும் மரபுவழி தவறாமல் கற்றுக் கொடுக்கும் ஆசானாகவும் காணப்படுகின்றார். தனது நீண்டகால இசை அனுபவத்தால் ஏராளமான மாணவர்களை உருவாக்கியதுடன் தன் பிள்ளைகளையும் தன்வழியில் சிறந்த மங்கல இசைக் கலைஞர்களாக உருவாக்கியுள்ளார். வானொலி,தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் நாதஸ்வர இசைவழங்கிய இவர் பலவிதமான பட்டங்களையும் விருதுகளையும் பெற்றுக்கொண்ட ஒருவராக காணப்படுகின்றார். எமது கலைப்பண்பாடுகளோடு இரண்டறக்கலந்து பிரிக்க முடியாத ஒரு நிலைபெற்று புனிதமான கலையாக, தேனென இனிக்கும் இசையாக விளங்குவது நாதஸ்வர இசை அத்தகைய கலையில் சிறந்த விற்பனராக விளங்கும் கலாபூஷணம் சுந்தரமூர்த்தி அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கிகௌரவிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

இவர்பெற்ற இதர விருதுகள் :-

1. நாதாமிர்தவர்ஷினி
2. நாதஸ்வரஇசைமாமன்னன்
3. நாதஸ்வரகானகலாரத்தினம்

4. நாதஸ்வரகானபூஷணம்
5. நாதஸ்வரமணி
6. நாதஸ்வரகானகலாசாகரம்
7. கம்பன் கழகம் வழங்கிய கௌரவ விருது
8. ஆளுனர் விருது



## ஏழை பங்காளன் ஜெபமணி ஜேசுசகாயம் அவர்கள்

நவாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெபமணி ஜேசுசகாயம் அவர்கள் பத்துபிள்ளைகளைக்கொண்ட குடும்பத்தின் தலைப்பிள்ளையாக அருளானந்தம் ஜேசுசகாயம் தம்பதிக்கு 1926.12.20இல் பிறந்தார். ஆங்கில சிரேஸ்ர தராதரப்பத்திரம், ஆங்கில உதவி ஆசிரியர் தராதரப்பத்திரம், பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர் தராதரப்பத்திரம் ஆகியவற்றை கல்வித்தகைமையாகப் பெற்று ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார். ஆங்கில உதவி ஆசிரியையாக பத்து வருடங்கள் கொழும்பு பாத்திமா முஸ்லிம் பாடசாலையில் கடமையாற்றும்போது எங்கள் பெருந்தலைவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடனான நட்புக் கிடைத்தது. அந்த நட்பு அம்மா அவர்கள் அமரத்துவம் அடையும் வரை பிரியாதிருந்ததை மன நெகிழ்வுடன் நினைவு கூருகின்றார். தொடர்ந்து ஆங்கில, தமிழ் உதவி ஆசிரியையாக இரண்டு வருடங்கள் மட்டக்களப்பு அரசினர் பாடசாலையிலும் இருபத்தைந்து வருடங்கள் உடுவில் மகளிர் கல்லூரியிலும் ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

ஓய்வு பெற்றபின் தன்னை முழுமையாக சமூகப்பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். ஏழை மாணவர்கள், நோயாளிகளை நாடி அவர்களுக்காக பிரார்த்தித்தல், தொண்டு செய்தல் போன்ற பணிகளை ஆற்றி வருகின்றார். இவர் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவராக இருந்த போதும் போயா தினங்களில் இந்து சமய வீடுகளில் "வாய் பேசுவதை விட வாழ்க்கை பேச வேண்டும்" போன்ற செய்திகளையும் அருட் பாடல்களையும் பாடி அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றியும் பிரார்த்தனை செய்தும் தான் மதசார்பற்றவர் என்பதைக் காட்டிக்கொண்டார்.

மேலும் கிராமத்தின் பாடசாலை மாணவரின் தமிழ் ஆங்கில தேவைகளுக்கு உதவி செய்தல் ஆங்கிலம்–தமிழ், தமிழ்–ஆங்கிலம் மொழி பெயர்ப்புக்களை தேவைப்படுவோருக்கு செய்து கொடுத்தல் ஆகிய பணிகளை நிறைவாக வழங்கினார். உடுவில் மகளிர் கல்லூரியில் சேவை ஆற்றிய காலத்தில் விடுதி மாணவர்களின் மேற்பார்வையாளராக சீரிய பணியாற்றினார். வறுமையுற்றோரின் வீடுகளுக்கு சென்று அவர்களோடு அளவளாவி மகிழ்தலும் ஏற்ற உதவிகள் செய்தலும் இவரது இயல்பான குணமாக அமைந்தது. பரோபகார சிந்தையும் பிறருக்கு சேவை செய்வதை இன்பமாக கொண்டு வாழ்ந்து வரும் ஜெபமணி ஜேசுசகாயம் அவர்களுக்கு இவ்வாண்டுக்கான சிவத்தமிழ் விருது வழங்கி கௌரவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

வலயக்கல்வி அலுவலக
வடமராட்சி.
பருத்தித்துறை
2014.12.19.

தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் அறநிதியம்.

மேற்படி விடயம் தொடர்பாக, தங்களின் 2014.12.05 திகதிய கடிதத்திற்கு அமைய எமது அலுவலகத்திலிருந்து 2015ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள திறமையின் உச்சமும் வறுமையின் உச்சமும் உடைய 100 மாணவர்களின் பெயர் விபரம் கீழே குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுகின்றது.

.........................................
சி.நந்தகுமார்,
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

S.NANTHAKUMAR
Zonal Director of Education
Vadamarachchi

| தொ. இல | பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 1 | செல்வன்.சி.கஜலக்ஷன் | யா விக்னேஸ்வரக் கல்லூரி |
| 2 | செல்வன்.பு.பிருந்தாபன் | |
| 3 | செல்வன்.செ.சாரங்கன் | |
| 4 | செல்வி.யோ.சயந்தனா | |
| 5 | செல்வி.பெ.செறின்நிவேதா | |
| 6 | செல்வி.இ.வந்தனா | யா இமையாணன் அ.த.க.வித்தி. |
| 7 | செல்வி.க.கஜனா | |
| 8 | செல்வன்.க.நிலவன் | |
| 9 | செல்வி.கு.மிதுலா | |
| 10 | செல்வி.செ.சுலக்சனா | |
| 11 | செல்வி.செ.கம்ஷிகா | யா கற்கோவளம் மெ.மி.த.க.பாட. |
| 12 | செல்வி.க.கமழினி | |
| 13 | செல்வன்.து.துவாரகன் | |
| 14 | செல்வன்.பா.விபூசணன் | |
| 15 | செல்வன்.வி.விஜயராஜ் | |
| 16 | செல்வன்.வி.ஜனார்த்தனன் | யா தொண்டைமானாறு வீ.ம.வி |
| 17 | செல்வி.த.உஷாளினி | |
| 18 | செல்வி.சு.சுரேகா | |
| 19 | செல்வன்.அ.விதுசன் | |
| 20 | செல்வன்.க.கவாஸ்கர் | |

| தொ. இல | பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 21 | செல்வன்.சி.சங்கீதன் | |
| 22 | செல்வி.கி.டெனிஷா | |
| 23 | செல்வன்.அ.வினோராஜ் | யா வதிரி திரு இருதயக் கல்லூரி |
| 24 | செல்வன்.பா.கிசோர் | |
| 25 | செல்வி.வ.ஜெயானி | |
| 26 | செல்வி.தி.நிரோஜா | |
| 27 | செல்வி.த.நிதர்ஷினி | |
| 28 | செல்வி.அ.அஜந்தா | யா பருத்.சித்தி விநாயகர் வித்தி. |
| 29 | செல்வி.சி.அஜீபா | |
| 30 | செல்வன்.ச.தனராசா | |
| 31 | செல்வன்.ர.டிலக்சன் | |
| 32 | செல்வன்.அ.சங்கீதன் | |
| 33 | செல்வன்.கி.கிருபாகரன் | யா புலோலி மெ.மி.த.க.பாடசாலை |
| 34 | செல்வன்.வி.ரதன் | |
| 35 | செல்வி.பி.பிரேமினி | |
| 36 | செல்வி.ம.மரியநிலோசா | |
| 37 | செல்வன்.ப.கிருஷாயினி | |
| 38 | செல்வன்.செ.ஜதுசன் | யா அல்வாய் வடக்கு றோ.க.த.க.பாட. |
| 39 | செல்வன்.சி.தர்சன் | |
| 40 | செல்வன்.ம.ரஜிந்தன் | |
| 41 | செல்வி.சி.இந்துஜா | |
| 42 | செல்வி.ஸ்ரீ.சங்கவி | |
| 43 | செல்வி.வி.ரேணுகா | யா கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வி |
| 44 | செல்வி.சி.விர்த்தியா | |
| 45 | செல்வி.சி.சுவஸ்திகா | |
| 46 | செல்வி.ச.சாந்தினி | |
| 47 | செல்வி.ஆ.அனுசியா | |
| 48 | செல்வி.இ.ஜீவரேகா | யா வல்வை சிவகுரு வித்தி. |
| 49 | செல்வி.பு.பிரியங்கா | |
| 50 | செல்வன்.சி.சிவதாஸ் | |
| 51 | செல்வி.சௌ.ரெனியா | |
| 52 | செல்வன்.கா.மதனரூபன் | |
| 53 | செல்வன்.ப.துஷ்யந்தன் | யா ஞானாசாரியார் கல்லூரி |
| 54 | செல்வி.ர.ரமிலா | |
| 55 | செல்வன்.சி.ரஜிகன் | |
| 56 | செல்வி.ம.ஜெயச்செல்வி | |
| 57 | செல்வன்.தே.கிதுர்சிகன் | |
| 58 | செல்வன்.வி.அருள்தாஸ் | யா கரணவாய் ம.வி |
| 59 | செல்வி.த.தர்சிகா | |
| 60 | செல்வன்.ம.டிலக்சன் | |

| தொ. இல | பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 61 | செல்வன்.M.ஜெனுஷாந் | யா அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி. |
| 62 | செல்வி.V.ரஷ்கா | |
| 63 | செல்வி.M.ரம்மியா | |
| 64 | செல்வி.K.பத்மயா | |
| 65 | செல்வி.I.பவிதா | |
| 66 | செல்வன்.றெ.றொனாட்டோ | யா கலட்டி றோ.க.த.க.பாடசாலை |
| 67 | செல்வன்.ர.றொக்சன் | |
| 68 | செல்வன்.அ.எ.நிலெக்ஷன் | |
| 69 | செல்வன்.சி.தேவப்பிரியன் | |
| 70 | செல்வன்.அ.யே.அ.யூகின்ராஜ் | |
| 71 | செல்வி.வ.சோபிகா | யா வல்வெட்டி இ.த.க.பாடசாலை |
| 72 | செல்வன்.கு.கோகுலன் | |
| 73 | செல்வன்.கு.திலக்சன் | |
| 74 | செல்வி.ந.பானுஷா | |
| 75 | செல்வன்.ஜெ.வினித் | |
| 76 | செல்வி.க.ரேவதனி | யா கம்பர்மலை வித்தியாலயம் |
| 77 | செல்வி.செ.தர்மினி | |
| 78 | செல்வி.து.பவித்திரா | |
| 79 | செல்வி.சி.சாரணியா | |
| 80 | செல்வி.பா.பிரியா | |
| 81 | செல்வன்.ப.அனுஷன் | யா கரணவாய் பொன்னம்பல வித்தி. |
| 82 | செல்வன்.இ.இரவீந்திரன் | |
| 83 | செல்வி.ஜெ.ஜெனோசிகா | |
| 84 | செல்வி.இ.மதனி | |
| 85 | செல்வி.ப.கெளதமி | |
| 86 | செல்வி.சி.றேக்ஸ்சிகா | யா சென்தோமஸ் றோ.க.பெ.பாடசாலை |
| 87 | செல்வி.ர.றொபின்சனா | |
| 88 | செல்வி.ஜே.பௌஸ்ரினா | |
| 89 | செல்வி.அ.டிலக்ஸி | |
| 90 | செல்வி.ச.வே.தர்சனா | |
| 91 | செல்வன்.க.திருபரன் | யா கரவெட்டி ஸ்ரீநாரத வித்தி. |
| 92 | செல்வன்.யோ.டயனி | |
| 93 | செல்வன்.சி.ஸ்ரீதரன் | |
| 94 | செல்வி.செ.சிவராதிகா | |
| 95 | செல்வி.வி.விஜயலக்சுமி | |
| 96 | செல்வி.த.கலையரசி | யா அல்வாய் சின்னத்தம்பி வித்தி. |
| 97 | செல்வி.ம.அனித்தா | |
| 98 | செல்வன்.கி.மயூரன் | |
| 99 | செல்வன்.அ.கரன் | |
| 100 | செல்வி.சு.சுகிதா | |

# தகவல் களஞ்சியம்

**மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் கும்பாபிஷேகம்**

எதிர்வரும் 02-02-2015 அன்று மானிப்பாய் மருதடி விநாயகரின் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வுள்ளது. கருவறை அர்த்த மண்டபம் முழுவதும் கருங்கற்கோவிலாக அமைக் கப்பட்டு புதிய பரிவாரக் கோவில்கள் அமைக்கப்பட்ட நிலையில் மிகப்பெரிய மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. பல வருடங்களாகத் திருப்பணி நடை பெற்ற இத்திருக்கோவில் கும்பாபிஷே கத்தில் கலந்து கொள்வதற்கு பெருந் தொகையான பக்தர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சிங்கப்பூர் சிலோன்றோட் செண்பக விநாயகர் மகா கும்பாபிஷேகம்**

சிங்கப்பூரில் இலங்கைத் தமிழர் களால் 200 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட செண்பக விநயாகர் கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 26-01-2015 காலை நடைபெறவுள்ளது.

**கந்தரோடை வற்றாக்கை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம்**

மிகப்பழமை வாய்ந்த கந்தரோடை வற்றாக்கை கண்ணகை அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் 06-02-2015 காலை நடைபெறவுள்ளது.

**காரைநகர் மணிவாசகர்சபை பவளவிழா**

கடந்த எழுபத்தைந்தாண்டுகளாகச் சிறப்பாக இயங்கும் மணிவாசகர் சபையின் பவளவிழாக் குறித்து சிறப்புமலர் 25-12-2014 அன்று காரைநகர் தியாகராசா மத்திய மகா வித்தியால யத்தில் வெளியிடப்பட்டது. பின் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை காலப்பகுதியில் மூன்று தினங்கள் பவள விழா சிறப்பாக நடைபெறச் சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

**கொக்குவில் கோணாவளை வீதியில் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா**


கொக்குவில் கிழக்கில் இலண்டனில் வாழும் திரு.சுசீந்திரன் தம்பதிகளின் சொந்தச் செலவில் இருமாடிகளைக் கொண்ட சகல நவீன வசதிகளையும் உள்ளடக்கிய கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை டிசம்பர் மாதம் 18ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு**


சைவமக்களின் தலையாய கல்லூரி யாகிய யாழ். இந்துக் கல்லூரி 1980இல் ஆரம்பிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டு கல்லூரியின் 125வது ஆண்டு பூர்த்தி விழா மிகப் பெரியளவில் கொண்டாடு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

# வாழ்த்துகிறோம்

## எங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள்
## க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்
## ( 2014 )
## சிறந்த பெறுபேறு பெற்றமை குறித்து
## வாழ்த்துகிறோம்



**செல்வி. பிரசா விஜயகுமார்**
2A, B
**(கலை)**



**செல்வி. லக்சிகா விக்னேஸ்வரன்**
A, 2B
**(கலை)**

**நிர்வாக சபை**
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் உருவாக்கியுள்ள துர்க்காதேவி வீட்டுத்திட்டம்.

தெல்லிப்பழை கிழக்கில் அமரர் பொன்னையா குடும்பம் அன்பளிப்பாக வழங்கிய நிலத்தில் ஆறு புதிய வீடுகளை தேவஸ்தானம் அமைத்துள்ளது. இவ்வில்லங்கள் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வாழும் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்காகக் கட்டப்பட்டு, முதற்தொகுதி வீடுகள் பூர்த்தியாகி யுள்ளது. பொதுமக்களின் உதவியோடு தொடர்ந்து வீட்டுத் திட்டப் பணி தொடரவுள்ளது.





ANDRA PRINTERS T.P : 021 222 8929